வஜித் ௵ த்திகை ௴	ஸம்பு 6 ஸஞ்சிகை - 11

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

OFFICE OF THE REGISTRAR ...
15 NOV 1947
MADRAS

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: ப்ரசுரிக்குமிடம் :

நெ. 22, மஹாலக்ஷ்மி தெரு, த்யாகராயநகர்,
சென்னை.

வர்ஷச் சந்தா : ரூபா 3—0—0

November 1947
Vol. 6 No. 11

விஷய ஸூசிகை

பக்க

1. ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம் 237
2. ஸ்ரீமான் வி. பாஷ்யமையங்காருடை வ்யாசத்திற்கு விடையளிப்பு 243
3. பஞ்சம ஜாதி தத்வம் 249
4. உலகப் போக்கு 254
5. செய்திகள் 256
6. ஸம்பாதகரின் குறிப்புக்கள் 258
7. ஸ்ரீ வேகாஸேது ஸ்தோத்ரம்

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்.

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள், மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.

2. ப்சுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்க ளெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்ய வேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடை நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருகிறது. அவகாசம் ப்ராப்தமாகும் பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸம்பாதகர்.



ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

...OF THE REGIS...
25 NOV 1947
MADRAS

ஸம்புடம் 6	ஸர்வஜித் ஹு கார்த்திகை மீ	ஸஞ்சிகை 11

"அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாந: ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥"

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோதிதா ।
ஸ்ரீ ந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதா சந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தகேஹாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

::0::

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[7-ம் அங்கம்]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L.,
அட்வோகேட், திருச்சி.]

இங்கே இந்தப் பகவான் அத்யந்த ஸுலபராய் எல்லாராலும் எளிதில் அணுகக்கூடியவராய் எழுந்தருளியிருக்கிறார். அப்படியிருந்தும் தோஷங்கள் ஒன்றும் இவரிடம் அணுக முடியாது; தோஷங்களுக்கு இவர் அத்யந்தம் துர்லபர்; தோஷதூரர்; எல்லையற்ற ஜ்ஞாநம் முதலிய ஷட்குண ஸமுத்ரம். விபுவான இவர், அந்நாமத்துக் கேற்றபடி, இமையோர் தலைவனை விச்வ ப்ரபுவாயினும், விஹாரத்தால் விவிதமான எங்கின்ற யோனிகளுமாய்ப் பிறக்கிறார்.

'விபு' என்பதற்கு, ப்ரபு வென்றும், பலவகையான ப்ரகாரங்களிலும் யோநிகளிலும் ஆவிர்ப்பவிக்கிறவர் என்றும் பொருள். விபு விபவங்களை வஹிக்கிறார். கமடம் (ஆமை), கிடி (பன்றி) பாடீந (மீன்) பதக (பக்ஷி) இவற்றின் ஆத்யந்த ஸஜாதீயமான ஆகாரங்களாக ஆவதால், ப்ரஹ்ம லக்ஷணமான பரிப்ருடதமத்வத்தை உறுதி செய்கிறார். வேதாங்கமான வேத நிருக்தகாரரான யாஸ்கர் 'ப்ரஹ்ம பரிப்ருடம் ஸர்வத:' என்று ப்ரஹ்ம சப்தத்துக்கு நிர்வசநம் செய்து பொருளுரைத்தார். 'பரிப்ருடஶ்ச' என்கிற பதத்தில் 'ப்ருடம்' என்பது 'ப்ருஹ' என்கிற தாதுவிலிருந்து உண்டானது. ப்ரஹ்ம சப்தமும் அதே தாதுவிலிருந்து நிஷ்பந்நம். 'பரி' என்பதற்கு, 'எல்லாவிதத்தாலும்' என்பது பொருள். எல்லாவற்றிலும் பெரியது ப்ரஹ்மம். 'ஸர்வத:' என்பதற்கு, 'எல்லாவற்றைக்காட்டிலும்' என்பது பொருள். 'பரிப்ருடதமம்' என்று ப்ரயோகிப்பதில், 'தமம்' என்பதற்கு 'எல்லாவற்றைக்காட்டிலும்' (ஸர்வத:) என்பது பொருள். இதனால் யாஸ்க நிருக்தமான வேதாங்கத்திலுள்ளதை ஸூசிக்கிறார். வேத ஸமுத்ரம் ஷடங்கம். ப்ரஹ்மமும் ஷாட்குண்ய ஸமுத்ரம்; ஸமுத்ரத்திலும் எல்லையற்ற ஸமுத்ரம். ஸமுத்ரத்தில் மீன் முதலிய ஜந்துக்கள் இருக்கும். பகவானுடைய ஜ்ஞாந மயமான காந்தி அலைக்கும் ஆதி விக்ரஹத்தில் மீன் முதலிய ஆகாரங்களும் தோன்றுகின்றன; அதில் உள்ளன. 'ப்ரஹ்ம ததமம்' என்று ஐதரேய உபநிஷத்தில் படிக்கப்பட்டது. 'தததமம்' என்பதில் 'த' என்னும் ஓர் எழுத்தை விட்டு 'ததமம்' என்று ச்ருதி படித்தது. 'பரிப்ருடதமம்' என்பதால் 'ப்ரஹ்ம ததமம்' என்ற ச்ருதியையும் ஸூசிக்கிறார். ப்ரஹ்மம் எல்லா வஸ்து ப்ரகாரமாயிருக்கிற தென்று ஸித்தாந்தம். ஶரீர ஶரீரி பாவத்தால், ப்ரகார ப்ரகாரி பாவத்தால், மீன் ஆமை பன்றி பக்ஷி முதலிய

129240

வற்றோடு ஸமாநாதிகரணமாகும். இந்த மத்ஸ்யாத்யவதாரங்களில் ஸாக்ஷாத் தாகவே பகவான் மீன் முதலியவைகளாகவே இருக்கிறான். இதனால் அவனுடைய ஸர்வ வஸ்து ஸாமாநாதிகரண்யம், ஸாக்ஷாத்தாகவும் இன்னும் த்ருடமாகவும் ஸித்திக்கிற தென்ற ரஸம் வ்யஞ்ஜிதம். 'ப்ரஹ்ம தாசா ப்ரஹ்ம தாஸா ப்ரஹ்மேமே கிதவா:' [கிதவர்களும் (சூதாடிகளும்) ப்ரஹ்மம்] என்பது ச்ருதி. இந்த ச்ருதி அம்ஸாதிகரணத்தில் படிக்கப்பட்டு, 'கிதவர்களும் ப்ரஹ்மத்தின் அம்ஸமான ஸரீரம்' என்று ஸாமாநாதிகரண்யம் (ஒரே வேற்றுமைச் சொற்கருத்து) நிர்வஹிக்கப்பட்டது.

'கோபவதூனாம் ஜயதி கிதவ: கோபிகா ஸார ஹாரீ ।

என்று கோபால விம்ஸதியில் ஸாக்ஷாத்தாகவே கோபாலன் கிதவனென்று வர்ணிக்கப்பட்டது. அதற்கு மூலம் 'கிதவ யோஷித: க்ருஷ்ணோ ஜெஹ்நிஸி', 'ஹே கிதவ பவ' என்பவைகளே. கண்ணனைக் 'கிதவன்' என்று ஏசியதாக ஸ்ரீ பாகவதத்தில் காணப்படுகிறது. 'மீன் முதலியவற்றின் ப்ரகாரத்தையே போன்ற ஆகாரங்கள்' என்பதால், அந்தந்த ஜாதிக்குச் சிறிதேனும் வேற்றுமையில்லாத ஆகாரத்தோடு அவதரிப்பதைக் காட்டுகிறது. மாரீசன் மாயமான வேடத்தோடு வருகையில், அங்கே காட்டிலுள்ள மான்கள், 'இது பொய்ம் மான்; இயற்கையான மான் ஜாதியல்ல' என்று ஒதுக்கிவிட்டன. அப்படியல்ல இந்த மாயி மஹேச்வரருடைய மீன் மனிதன் முதலிய அவதாரங்கள். தங்கள் இன மென்றே அந்தந்த ஜாதி ம்ருகங்கள் கொள்ளும்படி ஸாத்ருச்யம். மனிதர்கள் ராமக்ருஷ்ணாதிகளை மனிதரென்றே நினைத்தது போல.

விவேகர்:— ஒருவர் பாக்கியில்லாமல் அஸேஷ ஜனங்களை மோக்ஷ வீடு சேர்த்து ஸம்ரக்ஷிப்பதற்காகவே அதீந்த்ரியனான பரம புருஷன் அவதாரங்கள் செய்கிறான். [ஸகல ப்ராணிகளும் தம் குழந்தைகளானபடியால் எல்லோரையும் மீட்கும் வரையில் பகவான் ஸ்ருஷ்டியும் அவதாரமும் செய்து கொண்டேயிருப்பான். எல்லோரும் முக்தி வீடு வந்து சேர்ந்துவிட்டால், அதன் பிறகு ஜகத் வ்யாபார மென்ற ஸ்ருஷ்டி முதலியவற்றிற்கு அவகாஸமில்லை.]

வ்யவஸாயன்:—[ஆச்சர்ய ரஸத்தினால் ஆவிஷ்டராய்]

"உபஜ்ஞாதோ நைவா விவாதா ஹி மயே விஸ்வகர்மா அபி
ஸ்வயம் சித்ரம் கர்த்தும் ந ப்ரபவதி யதா த்வஷ்டா அபி ஸ: ।
ஸ்வயம்பூரப்யாதிஸ்ரஷ்டா ஸ ஹி பரம்
ஸ்வயம் வஹத்ராஜா நிவாஸ்யாபி விஹா சித்ரம் ஸ்வவிஷயம் ॥"

பகவானுடைய உருவங்கள் அடங்கிய இச்சித்ரத்தை அஸுர ஸில்பியான மயனும் தேவஸில்பியான த்வஷ்டா (விச்வகர்மா)வும், மிகப் பரந்த மஹிமையுடைய விச்வ க்ருத்தான ப்ரஹ்ம தேவரும், தம்முடைய சொந்த ஸக்தியால் சிறிதேனும் எழுத ஸக்த ரல்லர். அகண்ட ப்ரஹ்மாண்டங்களையும் முதல் ஸ்ரஷ்டா எனப்படும் ப்ரஹ்மாவுக்கும் முந்திய ஸ்ரஷ்டாவும், எல்லோரினும்

ச்ரேஷ்டருமான தாமரையாள் கேள்வனுன அந்தப் பகவானே தன் விஷயமான இந்தச் சித்ரத்தை ஸ்வயமே எழுதி யிருக்கவேணும். 'பத்மாஸஹ:' [தாமரையாள் கேள்வன்] என்ற விசேஷத்தில் மிக்க ரஸமுண்டு. 'அவள் என்ன கோளாறு சொல்லி விடுவளோ!' என்று மிக்க அச்சத்துடன் ஜாகரூகராய் எழுதினர் போலும். அவளும் கூட இருந்து பணிக்குச் சொல்லிக் கொண்டு அவள் இங்கிதங்களையும் தெரிந்துகொண்டு, அதற்கெல்லாம் இணங்க எழுதினர் போலும். அவர் அழகு அவளுக்குத் தெரிந்ததுபோல் அவருக்குத் தெரியாது. ஶில்பக் கலைகளில் ஆண்களிலும் பெண்கள் மிக்க பணிக் கறிந்தவர்கள். அவள் எங்கே சிரித்து விடுவளோ என்று அச்சத்துடன் எழுதியது. முற்பாதியில் சொன்ன மற்றவர்கள் தங்கள் ஶக்தியால் எழுத வல்லவ ரல்லர்.

'கநவூவிஶ்ரு கூ-ாம-தெ யத்ஸ்ரீஹிதஜஅ்ரு-தஃ'

என்றபடி, பகவான் விலக்ஷணமான ஒரு ஶக்த்யநுப்ரவேஶம் செய்து, தம் ஸொந்த ஶக்தியால் செய்யக்கூடும். அப்படி பகவானே தன்னைக் கொண்டு செய்வித்ததாக இங்கே இந்தச் சித்ர ஶில்பியும் கூறினர். 'ப்ரதம ஶில்பி' என்றால் அது ப்ரஹ்ம தேவரைக் குறிக்குமோ வென்று பயந்து, அவருக்கும் முந்திய ஶில்பியான பரம புருஷன் என்பதை 'ப்ரதமதர ஶில்பி' என்பதால் காட்டுகிறார். முதல் ஸ்ருஷ்டி கர்த்தா வென்று பேசப்படும் ப்ரஹ்மாவையும் படைத்தவர். கோபால விம்ஶதியில்.

'ஹரதி உ-ஹுஶிவண்ணஉணநொ ஞிவிதஃ கெந உவைஷ ஶிலிநா'

என்ற ச்லோகத்தில், 'ஶிரஸ்ஸில் மயில் தோகை அலங்காரத்தோடு என் ஹ்ருதயத்தில் விளங்கும் இந்த அத்புதமான கோபால விக்ரஹ சித்ரம் எந்த ஶில்பியால் எழுதப்பட்டது?' என்று ஆச்சர்ய ரஸத்துடன் வினவுகிறார். அதற்கு,' அகண்ட ப்ரம்ஹாண்ட ப்ரதம ஶில்பியான பகவானுன அம்புயத்தாள் கணவன் தான் எழுதி யிருக்க வேணும்' என்பதே இங்கு அதற்குப் பதில். 'கேந' என்ற ஶப்தத்துக்கு, 'யாராலே?' என்றும், 'ஆநந்த வடிவான பகவானுலே' என்றும் பொருள். கேள்வியிலேயே பதிலும் அடங்கி யிருக்கிறது. நம் ஹ்ருதயத்தில் பகவானுடைய அற்புத விக்ரஹத்தை எழுதப் பகவான் தான் க்ருபை செய்து தாமே ஶில்பியா யிருக்க வேணும்.

'யமேவைஷ வ்ருணுதே தேந லப்யஸ்தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்' என்கிற 'நாயமாத்மா' ச்ருதியை நினைப்பூட்டுகிறார். 'ததாத்மாநம் ஸ்வயமகுருத' என்கிற தைத்திரீய உபநிஷத்தையும் 'ஆத்மக்ருதே' என்கிற ஸூத்ரத்தையும், 'ஸ்வயம்' 'ஸ்வவிஷயம்' என்கிற பதங்களால் ஸூசிப்பிக்கிறார்.

ஸமுத்ரத்தில் முதல் மூன்று அவதாரங்களும் செய்யப்பட்டன. ஸமுத்ர ஶாயியான பகவான், அருகிலுள்ளதும் தமக்கு மிக்க பழக்கமுமான ஸமுத்ரத்தில் மத்ஸ்ய கூர்ம வராஹாதிகளைச் செய்தார் போலும் என்று ரஸம். முதல் அவதாரமான மீநத்தை நீங்கள் ஸேவிக்கவேணும்.

" निर्मग्नश्रुतिजालमार्गणदशादत्तक्षणैर्वीक्षणै-
रन्तस्तन्वदिवारविन्दगहनान्यौदन्वतीनामपाम् ।
निष्प्रत्यूहतरङ्गरिङ्खणमिथःप्रत्यूढपाथश्छटा-
डोलारोहसदोहलं भगवतो मात्स्यं वपुः पातु नः ॥ "

தஶாவதாரத்தில் மத்ஸ்யாவதார ச்லோகம் இது. அங்கு அவதார நாடக வேஷங்கள் நாடகக் காட்சிகளிற் போலக் கண் முன்னே அத்புதமாய்த் தோன்றி மனத்தில் சித்ரமாய்ப் பதியும்படி வர்ணிக்கப்பட்டன. இந்த நாடகத்தில் அந்த அவதாரத்தை வர்ணிப்பதில் அந்த ச்லோகத்தையே படிப்பது உசிதம். மத்ஸ்யத்துக்குக் கண் அழகு. 'மீநாக்ஷி' 'மீன் விழியாள்' 'கயற் கண்ணுள்' என்று ஸ்த்ரீகள் கண்களுக்கு மீன் கண்ணை உவமை கூறுவர். இங்கே தேடவேண்டியவை ஶப்தமயமான வேதங்கள். வேதங்கள் உலகிற் குக் கண்கள் என்பர். 'வேதா ஜ்வாஸம் அக்ஷி:' என்று வேதங்களைப் பறி கொடுத்த எண் கண்ணரான ப்ரஹ்மா 'எனக்கு எட்டுக் கண்கள் இருப்பதால் என்ன பயன்? வேதங்க ளல்லவோ எனக்கு முக்யமான கண்? கண்ணுன கண்' என்று கதறினர். மீநப் பெருமானின் கண்கள் வேதங்களாகிய ஞானிக் கண்களைத் தேடுகின்றன. புண்டரீகாக்ஷனுடைய தாமரைக் கண்கள் ஸமுத்ர ஜலத்துக்குள் தேடுகின்றன. ஸ்வபாவத்திலேயே தாமரை போன்ற கண்கள் மீநத்தின் கண்களாகும்போது எத்தனை அழகா யிருக்க வேணும்! 'கப்யாஸ நயந:' என்று ஆளவந்தார் கேட்டார். பகவான் எரிகதி ரோன் மண்டலத்தில் வஸித்தாலும் அவனுக்குக் கப்யாஸ புண்டரீகம் போன்ற இரண்டு அக்ஷிகள். ப்ரளயத்தில் மார்க்கண்டேயர் ஸேவிக்கையில், 'யஸ்ய வராஹம் ஶ்ரீவத்ஸாக்ஷ:' என்றபடி 'கரியவாகிப் புடைபடர்ந்து மிளிர்ந்து செவ்வரி யோடி நீண்டவப் பெரியவாய கண்களே' அவரைப் பேதமை செய்தன. ப்ரளய கால விக்ரஹத்தில் ஸேவித்துக் கொண்ட கண்களே இக்கண்ணன் கண்க ளென்று அடையாளம் கூறினர். முன்னே ஸேவித்த கண்களின் ஒற்றுமை யால் கண்ணை அடையாளம் காட்டினர். ராமாவதாரத்தில் ராஜீவ லோசநன்; கண்ணன் அரவிந்தாக்ஷன்; புண்டரீகாக்ஷன். ஜலத்துக்குள் மீன்கள்தாம் நன்ருய்க் கண்களை விழித்துப் பார்க்கக் கூடியவை. ஜலத்துக்குள் ஶப்தமய மான வேதங்களை ஒளித்து விட்டார்கள். ஜலத்துக்குள் செய்யும் ஶப்தம் நன்ருய்க் கேட்காது. கப்பல்கள் ஸமுத்ரத்தில் செல்லும்போது நீண்ட இரும்பு அடிமரத்தால் முன்பு ஜலத்தைக் கிழித்து இருபுறமும் தள்ளி வழி செய்து கொண்டுதான் போகும். இங்கே பெருமாள் திருமேனியே கப்பல்; ஒரு பெரிய த்வீபம் போன்ற திருமேனி என்பர். இத்திருமேனிக்கு ஸமுத்ர ஜலத்தாலும் அலைகளாலும் ப்ரதீகாரமில்லை.

" அலைகடல்நீர் குழம்ப அகடாட வோடி யகல்வா னுரிஞ்ச முதுகில்
மலைகளைமீது கொண்டுவரு மீனைமாலை "

" வானோ ரளவும் முதுமுந்நீர் வளர்ந்த காலம் வலியுருவில்
மீனய் வந்து வியந்துய்யக் கொண்டதண்டா மரைக்கண்ணன் "

என்று கண்ணபுரத்தில் கண்ணனைக் கண்டு கொண்டார் கலியன். 'சுயஶிக்ஷி தொ ஹாவ—செ:' என்ற தபாவதார ஸ்தோத்ரத்தில் குறிப்பிட்ட பாவுகர் முக்யமாகக் கலியன். 'வானோர்' திருமொழியை நினைத்து 'தெவ' என்று அந்த ஸ்தோத்ரம் தொடங்கியது போலும். அபஹரிக்கப்பட்ட அந்த வேதங்களைத் தேடிக் கண்டு மீட்டதோடு டோலோத்ஸவ ஸம்ரம்பத்துடன் அலை கடலில் உத்ஸவ ஸேவை தந்து சித்த ரஞ்ஜநம் செய்யத் திருவுள்ளம்; அதில் தொஹஜ (தீவ்ரமான ஆசை, இச்சை). மத்ஸ்யத் திருமேனிக்கே இப்படி இச்சை யென்பதை 'மொஹானொஹஸதொஹஜ ஊஷ்ூ வவ—:' என்பதால் விளக்குகிறார். கடல்கள் முழுவதும் ஓடி விளையாடு மிந்த மிகப் பெரிய ப்ரம்ஹ மீநத்திற்கு டோலோத்ஸவம் செய்விக்க யார்தான் ஶக்த ராவர்? எங்கே ஊஞ்சல் சங்கிலிகளைத் தொங்க விடுகிறது? ஊஞ்சலுக்குத் தாமரைப் புஷ்பம் சிங்காரங்கள் யார் செய்வது? இந்த ப்ரம்ஹப் பெருமாளை ஊஞ்சலில் விட்டு யார் ஆட்டுவது? தாமே இதற்கெல்லாம் வேண்டிய ஸம்விதாநங்களைச் செய்கிறார். அதாவது: திருமேனியே செய்கிறது. ஸமுத்ரத்தின் அலைகள் எதிரும் பிதுரமா யிருக்கையில், இம்மத்ஸ்யப் பெருமாள் மரக்கலம் போல் ஓடி ஸஞ்சரிக்கையில் அலைகளோடு மேலே எழுவதும், கீழே வருவதும், இருபுறம் ஊஞ்சல் ஆடுவதுபோல் இருக்கிறது. ஸமுத்ர அலை ஶக்தியைக் கொண்டே ஸஹஜமான ஊஞ்சல் உத்ஸவம் ஸித்திக்கிறது. தம்முடைய தாமரைக் கண்கள் ஜலத்துக்குள் வேதங்களைத் தேடும் தஶையில், கடாக்ஷ வீக்ஷணங்களை வெகு தூரம் செலுத்துகையில், ஸமுத்திரத்தி னுள்ளே தாமரைப் புஷ்பக் காடுகள் சொரியப்படுகின்றன. டோலோத்ஸவத்துக்கு வேண்டிய புஷ்பாலங்காரம் போல் இருக்கிறது.

'உத்க்ஷணை: வீக்ஷணை:'—'க்ஷணம்' என்பதற்கு, 'மிகக் கவந மான அவதாநம்' என்றும், 'உத்ஸவம்' என்றும் பொருள்கள். வேதங்களைத் தேடும் அவதாநம். பக்தர்களுக்கு உத்ஸவ ஹர்ஷத்தை தருவது. வீக்ஷணங் களால் ப்ரிய ப்ரஜைகளை வளர்க்கிற தென்று முதலிற் கூறிய மீன் ஸ்வபாவத் தையுப் காட்டுகிறார். பக்த ப்ரஜைகளை இந்தத் தாமரைப் புஷ்பங்கள் சொரியும் இந்த வீக்ஷணங்களால் மகிழ்வித்துப் பூரித்து வளர்க்கிறார். கடலுப்பு நீருக்குள் எல்லாம் தாமரைப் புஷ்பக் காடுகள்.

'சுரவிந்த ஹநாநி'—அடர்த்தியாகத் தாமரைகளை. 'ஔத்ந்வதீநா உவாம் சுக்ஷ்ந்வதீவ'—கடலுப்பு நீருக்குள்ளே பரப்புவது பேல.

நீ்ஷ்ரு ஶ்ரு—திஜாலஶாஹுண'—ச்ருதி சப்தங்கள் கடல் நீரில் கண்டு பிடிக்கவே முடியாமல் அமுக்கப்பட்டன. 'ஜாலம்' என்பது ஸமூஹத்தையும் வலையையும் சொல்லும். மீன்கள் தூண்டிலில் (வலையில்) உள்ள மாம்ஸம் முதலியவற்றுக்கு ஆசைப்பட்டு அதில் வந்து சிக்கிக்கொள்ளும். இந்த ஸர்வஜ்ஞ மீநம் வலையைத் தேடி அகப்பட்டுக் கொள்ளப் பார்க்கலாமோ என்ற ஆக்ஷேபம் வரும். 'ஶ்ரு—திஜாலம்' என்பது காதென்றும், வலை ப்ராணிக ளுடைய காதென்றும், வலையில் சிக்கிக் கொண்டு அங்கேயே வெளிவராம

லிருந்து உஜ்ஜீவிக்கச் செய்யவேண்டு மென்றே இந்த மீனப் பெருமாளுக்கு ஆசை. வேத மென்னும் ச்ருதி மூலமாக மனிதருடைய காதென்கிற ச்ருதி வலையில் புகுந்து சிக்கிக் கொள்ள வேண்டு மென்றே ஆசை யென்று ரஸ வ்யஞ்ஜநம். ஜலத்தைத் தேடும் மீன். அஜாக்ரதையால் ஜாலத்தில் அகப்பட்டுக் கொள்ளும் மீனல்ல. இவன் காது வலைக்குள் சிக்கிக்கொள்ள வேண்டு மென்றே அவதாநத்துடன் ஜாலத்தை மார்க்கணம் செய்யும் (தேடும்) மீன் என்று ரஸம். காதென்னும் அவயவ மிருக்கும் வலைபோன்ற சிக்கல்களை உடல் சாஸ்த்ரத்தில் பார்க்கவேணும். இந்தக் காதால் கேட்டுக் அந்த காதால் ஓட விடுவதில் திருவுள்ள மில்லை. 'ஶ்ரோதவ்ய: ஶ்ரோதவ்ய' என்று ச்ருதிகள் திரும்பவும் படித்துப் பிறகு, 'மந்தவ்ய:' என்று படிக்கின்றன. காதில் விழும் ப்ரம்ஹம் அங்கிருந்து உள்ளேயே ஹ்ருதயத்தில் புகவேணும்; அதை வெளியே விட்டு விடலாகாது. இப்படி பகவத் ஸ்வரூபம் காது வழியாக ஹ்ருதயத்தில் புகுந்து வஸிப்பதில்தான் பகவானுக்கு நோக்கு. ச்ருதி ஜாலத்தில் சிக்கிக் கொள்வதே அவனுக்கு இன்பம்; க்ஷேமம். அவன் ஸொத்து அவனுக்கு மீள்வது நஷ்ட த்ரவ்ய லாபமே.

'மாத்ஸ்யம் வபு: பாது ந:'— வேதங்களை மீட்டு உலகத்துக்கு ஞானத்தை மீட்டுக்கொடுத்தது பொது உலகத்துக்கு ரக்ஷணம். த்யாந ஸம்ஸ்காரத்தால் ஸேவித்துக்கொள்ளப்படும் இந்தத் திவ்ய விக்ரஹமும் இவ்விதமான டோலோத்ஸவமும் அநுஸந்தாநத்தால் ஸர்வ பாபங்களையும் போக்கி, ஶரீரம் விழும்போது நமக்கு க்ஷேமம் அளிக்க வேணுமென்றும் ப்ரார்த்தனை. [ஸ்ரீபாகவதம் பஞ்சம ஸ்கந்தம் 18-வது அத்யாயத்தில்] 'ரம்யக வர்ஷத்தில் பகவானுக்கு ப்ரிய தமமான மத்ஸ்ய அவதார ரூபத்தை இன்றுகூட அந்த வர்ஷ புருஷரான மநு மஹத்தான பக்தியோகத்தால் ஆராதிக்கிறார்' என்று சுகர் கூறினர். பக்தர்களுக்கு இன்றும் பக்தியால் அநுபவகோசர மாகலாம். அந்தந்த அவதார ரூபமும் பகவானுக்கு ப்ரியதம மென்றே வர்ணிக்கப்படுகிறது. எல்லாம் நிரதிஶய ப்ரியமானதால், பகவானுடைய ப்ரீதியில் தாரதம்ய மில்லை. ஒவ்வொரு ரூபமும் நிஸ்ஸமம்; நிகரற்றது.

விவேகர்:— மத்ஸ்ய பகவானுடைய கண்போல் உள்ளது உன் கண். [ஸுமதி என்பது ஶோபநமான புத்தி; வேத தத்வங்கள் அஜ்ஞாந மோஹங்களில் முழுகிப்போயிருப்பதை ஸுமதியால் தூக்கியெடுத்துத் தனக்கும் பிறர்க்கும் உபயோகிக்கலாம். இக்கருத்தை ஸுமதி அடுத்தாற்போல் உரைக்கிறாள். நல்ல மதி யென்னும் அழகிய கண்ணாகிய வேதப்பொருளை உள்ளபடி பார்க்கலாம்.] வேதங்களைக் கண்டெடுத்து மீட்ட மத்ஸயப் பெருமாள் போன்றது ஸுமதியின் கண் என்று வ்யஞ்ஜநம் செய்வது ரஸிக்கத்தக்கது.

ஸுமதி—இந்த மத்ஸ்யப் பெருமாள்போல் நீங்களும் மோஹக் கடலில் முழுகிப்போன வேத தத்வங்களை உத்தாரணம் செய்கிறீர்கள். பகவானுடைய மற்ற அவதார ரூபங்களையும் ஸேவிப்போம்.

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீ. உ. வே. வி. பாஷ்யம் ஐயங்காருடைய வ்யாஸத்திற்கு விடையளிப்பு.

[ஸ்ரீ. உப. வித்வான் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி, காஞ்சீ.]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி.]

இவருடைய அடுத்த பாராவைப் பாருங்கள்—"மேலும், மேற்கண்ட ஜனங்கள் இதுவரையிலேயே எல்லாப் பெரிய கோவில்களிலும் கூட்ட காலங்களில் உட்புகுந்து கலந்து வந்திருக்கும் பஹிரங்க ரஹஸ்யத்தை யார் அறியார்? அதனுல் கெடாதது இனிக் கெட இருக்கிறதோ?" என்பது. இப்பாராவுக்கு என்ன அர்த்தமென்று இவரே விவரிக்கவேணும். ஆங்காங்கு வெளி வீதிகளில் புறப்பாடு உத்ஸவங்கள் நடக்கும்போது இவ்வரி ஜனங்கள் கூட்டங்களில் வந்து கலந்து கொள்வது அநாதி காலமாகவே உண்டாதலால் அதையெடுத்து எழுதுகிருரா? அல்லது ஸமீப காலத்து அதர்க்கண ஸம்பவங்களை எடுத்து எழுதுகிருரா? என்பது விளங்கவில்லை. ஸமீப காலத்து ஸம்பவங்களை எழுதுகிருராகில் "ஸோபி ஸாக்ரோஶ ஏவ" என்றுப் போலே இன்னமும் ப்ரபல ஆக்ஷேபங்களிலேயே இருந்து வருகிற இதனை எழுதுவதால் பயனில்லையென்று அறிக. அநாதிகாலமாக நடந்து வருகிற வெளிவீதிக் கலப்பு விஷயங்களை யெழுதுகிருராகில், "விஷ்ண்வாலய ஸமீப ஸ்தாந் விஷ்ணுஸேவார்த்தமாகதாந்। சண்டாளாந் பதிதாங்வாபி ஸ்ப்ருஷ்ட்வா ந ஸ்நாந மாசரேத்" என்பது முதலான சாஸ்த்ர வசனங்களின் ஆதாரம் பெற்ற அவ்விஷயததில் கெடுதல் யாதொன்று மில்லையாதலால் அதை யெடுத் தெழுது வதிலும் பயனென்று மில்லை யென்றறிக. "அதனுல் கெடாதது இனிக் கெட இருக்கிறதோ" என்பது மஹான்கள் எழுதும் வார்த்தையு மல்ல. ஏற்கெனவே எவ்வளவு கெடுதல்கள் நேர்ந்திருந்தாலும் அவற்றைத் திருத்த முயல்வது மஹான்களின் கடமையே யல்லது கெடுதல்களோடு இன்னமும் கெடுதல்களைக் கூட்டி வளர்க்கப்பார்ப்பது சிறிதும் முறைமையல்ல. ஒரு குடும்பத்தில் கடன் ஏறிவிட்டால் வருந்தி அதைப் பரிஹரிக்கப் பார்ப்பது விவேகிகளின் பணியேயல்லது, ஏறின கடன்களோடு இன்னமுந்தான் கடன் ஏறட்டுமே என்று மேன்மேலும் கடன்களை வளர்ப்பது ஈடல்ல. ஒரு கர்ப்பிணி ஸத்ரீ டாக்டரிடம் வந்து, 'ஏற்கெனவே பல கர்ப்பங்கள் சிதைந்து போயின; இந்தக் கர்ப்பமாவது ஸுரக்ஷித மாயிருக்கும்படி நோக்க வேணும்' என்று கோரினுல், அவர் என்ன சொல்வர்? என்ன செய்வர்? என்பதை நாம் சொல்ல வேணுமோ? பிறப்பகத்தே மாண்டொழிந்த பிள்ளைகள் நால்வரையும் இறைப் பொழுதில் கொணர்ந்து கொடுத்த ஸ்ரீ க்ருஷ்ண பகவானைப்போல் அதிமாநுஷ க்ருத்யம் செய்ய சக்தியில்லை யாயினும், தற்காலத்தில் செய்யக்கூடிய நன்மையையாவது செய்வோமென்று முயல்வது தகுதியேயன்றி, பழைய கெடுதல்கள் போலவே புதிய புதிய கெடுதல்களும் தாராளமாக ஏற்படட்டுமே யென்று ஒரு விவேகியும் நினைக்கவும் சொல்லவும் தகுதி யில்லை.

அடுத்தபடி எழுதுகிறார் :—“ அநீதிச் செய்கையால் தைவஸாந்நித்யம் போய்விட்ட தென்று எந்த ஆகம சாஸ்த்ரங்களைக் கொண்டு நாம் நம்பவேண்டி யிருக்கிறதோ அந்த ஆகம சாஸ்த்ரப்படி ஒரு கோவிலிலாவது ஒரு கார்ய மாவது நடந்து வருகிறதா ? கிடையாது. ஆகவே தைவஸாந்நித்யம் என் றைக்கோ போய்விட்ட தென்று சொல்ல வேண்டுமே யொழிய இன்றைக்குப் போய் விட்டதாகச் சொல்ல வேண்டிய அவசியமில்லை ”—என்று.

இப்படி இவர் மாத்திரமல்ல ; மற்றும் பல பல பேர்களும் இந்த வழி யில் வாதிப்பதுண்டு. ‘கோவில்களில் கணக்கு வழக்கில்லாத எத்தனையோ அநாசாரங்கள் நடந்து வருகின்றன ; அவைகளாலேயே வெகு காலத்திற்கு முன்னமே தைவஸாந்நித்யம் விலகியிருக்க வேண்டுமே ; இது வரையில் விலகாமல் இப்போதுதானா விலகி விடப்போகிறது ?’ என்னு மிந்த வாதத்தைக் கேட்டுப் பலரும் தலையாட்டுவ துண்டு. இதற்குத் தினவடங்க பதில் சொல்லு கிறோம். ஆசாரத் தவறுகளும் அநாசாரங்களும் நேர்ந்திருக்கலா மென்று அநுமாநமாகச் சொல்ல முடியுமே யல்லது, வேறு விதமாகத் திடப்படுத்திச் சொல்ல இயலாது. பலர் அறியத் திடமாகத் தெரிய வந்தால் உடனே கிளர்ச்சி ஏற்படும் ; பரிஹார முறைகளும் ஏற்படும். அநுமாந ஸித்தங்களான அநாசாரங்களைக் கொண்டு நாம் என்ன செய்ய முடியும் ? பரம வைதிகர்க ளாக உள்ளவர்கள் தம்தம் உறவினர் க்ருஹங்களில் விசேஷ காலங்களிற் சென்று உண்கிறார்கள் ; ‘அந்த க்ருஹத்தி லுள்ளவர்களும் சமையல் செய்கிற வர்களும் ஸரியான நடத்தை வாய்ந்தவர்கள் தானா ? சமையல் செய்பவர் ஸ்நாந ஸந்த்யாவந்தனங்களை யதாவிதி செய்திருக்கிறாரா ?’ இத்யாதி விசாரங்களை அவர்கள் செய்கிறார்களோ ? செய்யத்தான் முடியுமோ ? ஏதாவது அநாசார முள்ளதாகப் பஹிரங்கமாய் வெளிவந்தால் அப்போது உடனே விலகிவிடுகி றார்கள். சமையல் செய்பவர்கள் ஒரு வேளைகூட ஸந்த்யாவந்தநம் செய்திருக்க மாட்டார்கள் என்று மனத்தில் எண்ணலாம். அது அநுமாந ரூபமே யாகும். அது கொண்டு ஒன்றும் செய்ய முடிகிறதில்லை. மற்று மொன்று பாருங்கள். பலர் உத்யோக முறையில் வெகு தூரதேசங்களிற் சென்று க்ஷணகாலமும் ஓய்வில்லாத வேலைகளில் அமர்ந்திருக்கிறார்கள். அவர்கள் நித்ய கர்மங்களை நெஞ்சால் நினைக்கவும் அவகாச மற்றவர்க ளென்பது நமக்குத் தெரியும். அவர்களுக்கு பித்ரு ச்ராத்தம் மாத்ரு ச்ராத்தம் அல்லது ஸீமந்தம் முதலிய கல்யாணங்கள் நேர்ந்தால் ஸ்வதேசத்திற்கு வந்து சேர்ந்து அந்தச் சடங்குகளைச் செய்ய நேர்கின்றது.

‘ 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌹𑍀𑌨𑍋𑌽𑌶𑍁𑌚𑌿𑌃 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌨𑌰𑍍𑌹𑌃 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌸𑍁 ’

என்ற ப்ரபல ப்ரமாணத்தின்படி அவர்களுக்கு ஒரு சடங்கும் அநுஷ்டிக்க யோக்யதையில்லை யென்கிற உறுதி யுடையவர்களும் கலந்து பரிமாற வேண்டி யிருக்கிறதே யல்லது ‘அப்பா ! நீ இந்தச் சடங்கு செய்வதற்கே அதிகாரி யல்லை’ என்று ஒருவரும் வாய் திறக்க முடிகிற தில்லை. வாய்திறந்தால், ‘நான் ஸந்த்யாவந்தநம் பண்ணவில்லை யென்று நீ கண்டாயா ? நீ பண்ணினாயா ?’

என்ற கேள்விகள் சரமாரியாகத் தோன்றிவிடும். பதில் சொல்லத் திணறி நிற்க வேண்டிவரும். ஆகவே ஒன்றும் வாய் திறப்பதற் கில்லை. பலரும் கூடி நிரூபித்த தவறுகள் இருக்குமாகில் அப்போது பஹிஷ்காரம் செய்வதோ ப்ராயச்சித்தங் கள் செய்விப்பதோ ப்ராப்தமாகிறது. இப்படிப் பலபல காட்டலாம்.

இவைபோல, ஆலயங்களிலும் பலர் கூடித் திண்ணமாக நிரூபிக்கக் கூடிய தவறுகள் ஏற்பட்டால், அப்போது கிளர்ச்சி யுண்டாகிப் பரிஹாரங்க ளும் செய்யப்பட்டே வருகின்றன. பரிஹாரம் செய்தே யாகவேண்டு மென்று பலர் நிர்ணயித்திருக்கவும், பரிஹாரம் செய்யப்படா திருந்தால் இங்கு தைவ ஸாந்நித்யம் போய்விட்ட தென்கிற நம்பிக்கை யுண்டாகி வைதிகர்கள் விலகுகிறார்கள். ஆகவே அநுமாநமாகச் சொல்லப்படுகிற அநாசாரங்களைக் கொண்டு என்றைக்கோ தைவஸாந்நித்யம் போய் விட்டதென்று நினைக்கவும் ப்ரஸக்தி யில்லை.

அடுத்த பாராவில் எழுதுகிறார்—"வாஸ்தவத்தில் ஆகம சாஸ்த்ரங்களை ப்ரவர்த்தி (ப்பி)த்தவன் இத்தகைய குற்றங்களை க்ஷமித்தருளக்கூடிய நிர் ஹேதுக க்ருபாவா னல்லவா? எந்தப் பாபிஷ்டனையும் அவன் குளிரக் கடா க்ஷிக்கமாட்டானா? தன்னை நம்பினவர்களைக் கைவிட்டு விடுவனா? அவர்களுக்குத் தன் ஸாந்நித்யத்தை மறைப்பனா?" இத்யாதி.

இதைக் கண்டு சில அசடுகள் ஏமாந்து கண்ணீர் பெருக்கலாம். ஈச் வரன் கருணாநிதி க்ஷமாநிதி என்பது கொண்டு, நாம் மனம் போனபடி யெல் லாம் செய்துவிடலா மென்று அர்த்தமா? அவனுக்குக் கருணையுண்டு க்ஷமை யுண்டு என்று நாம் நம்புவ தெல்லாம் சாஸ்த்ரங்களைக் கொண்டே யல்லது வேறு எதைக் கொண்டு மல்ல; அப்படிப்பட்ட சாஸ்த்ரங்களிலேயே

"தாநஹம்........க்ஷிபாம்யஜஸ்ரம் அஶுபாநாஸுரீஷ்வேவ யோநிஷு"

"கல்பகோடிஶதைநாபி ந க்ஷமாமி வஸுந்தரே।"

"ஆஜ்ஞாச்சேதீ மம த்ரோஹீ மத்பக்தோபி ந வைஷ்ணவ:"

இத்யாதிகளாய் லக்ஷக்கணக்கான நிக்ரஹ வாக்யங்களையும் காண்கிறோம். ஒரே வ்யக்தியினிடத்தில் இன்று அநுக்ரஹமும் நாளை நிக்ரஹமும் செய்யக் காண்கிறோம். "ஏமாலிக னவனோடு தோழமைக் கொள்ளவும் வல்லாய், சாமா றவனை நீ யெண்ணிச் சக்கரத்தால் தலை கொண்டாய்" என்று கதை களும் காண்கிறோம். ஸுக்ரீவனோடு அக்நி ஸாக்ஷிகமாக நட்புச் செய்து விட்டுத் தம்பியை யிட்டு 'ந ஸ ஸங்குசித: பந்தா:' என்று தெரிவித்ததையும் பாரா யணம் செய்கிறோம். சாஸ்த்ர வரம்பை மீறினாலும் க்ஷமிப்பது கருணை செய் வது என்பது உண்டுதான்; ஆனாலும் அதற்கெல்லாம் ஒரு அவதி அவச்ய முண்டு. பகவானிடத்தில் க்ஷமையும் கருணையு முள்ளதென்று நாம் மனம் போன போக்கில் எதையும் செய்துவிடலா மென்னில், அப்போது ஒரு சாஸ்த்ர மும் வேண்டியதில்லை யன்றோ? ரஜஸ்வலைகள், ப்ரஸவித்தவர்கள், தீட்டுக்காரர்

கள், நாய், கழுதை, என்கிற வாசிகளும் இனி வேண்டாவே. எப்படிப்பட்டவர்களையும் குளிரக் கடாக்ஷிக்க தீக்ஷிதனாயிருக்கின்ற அப்பெருமான் துருஷ்க யவந ஹூணாதிகள் வந்தால் கண்ணை மூடிக்கொள்வே னென்கிறானோ? 'ஒரு நாளும் நம்மிடம் வந்தறியாத விவர்கள் இன்று வந்தார்களே' என்று மிகுந்த ஆதரத்தோடு அவர்களையே யன்றோ முந்துற முன்னம் கடாக்ஷிப்பன். பகவத் ஸந்நிதியில் ஒரு ப்ரேதம் விழுந்தால் 'இவ்வாத்மா பெரியவுடையாரை [ஜடாயுவை]ப் போலேயும் பிள்ளை திருநறையூரரையரைப் போலேயும் நம் மெதிரே உடம்பை விட்டவ னன்றோ?' என்று எம்பெருமான் திருவுள்ள முவந்திருப்பனென்று கொண்டு அந்த ப்ரேதத்திற்காகவும் ஒன்று செய்ய வேண்டிய அவசியமில்லை யாகுமன்றோ? கொழுத்த நாஸ்திக வாதத்தில் வந்து முடிவதன்றி வேறொன்று மில்லையாகும்.

அடுத்த பாராவில்– "இவ்வுண்மையை ஆழ்வார்களும் ஆசார்யர்களும் தெரிவித்திருக்கவில்லையா? அர்ச்சைகள் ஆகம விதிப்படி பூஜிக்கப்பட்டு வருகின்றனவா வென்று விசாரித்துத் தெரிந்து கொண்டா அவர்கள் அர்ச்சாவதாரங்களில் ப்ரபத்தி பண்ணினார்கள்?" என்று கேட்கிறார். அந்தோ! இவை என்ன கேள்விகள்!. 'நல்லது கெட்டால் நாய்க்கும் வழங்காது' என்பது உலகறிந்த பழமொழி. தவறுகள் தெரியாத வரையில் க்ஷேமம். தெரிந்த பின்புங் கூட ஸஹித்திருந்தார்க ளென்பது அஸம்பாவிதம். ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ ராமானுஜர் மாதுகரம் செய்துவந்தபோது விஷ மிட்டார்க ளென்றும், பிறகு மாதுகரத்தை நிறுத்திக் கிடாம்பி யாச்சானை மஹாநஸ கைங்கர்யத்தில் கொண்டா ரென்றும் இதிஹாஸங்களில் வாசிக்கிறோம். இந்த ஸம்பவத்தின் காரணத்தையும் அவற்றில் காண்கிறோம். ஸ்வாமி தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்தினபோது சில கைங்கர்யபரர்களின் அநாசாரங்களைக் கண்டிக்க நேர்ந்த தென்றும் அது காரணமாகவே விஷமிட்டு நலியப் பார்த்தார்க ளென்றும் ஸ்பஷ்டமாக வுள்ளது. ஆகவே அநாசாரங்கள் தெரிய வந்தால் பெரியார்கள் யாவச்சக்தி கண்டிக்கப் பார்க்கிறவர்களே யொழிய ஆதரிக்கப் பார்க்கிறவர்க ளல்லர்.

அர்ச்சாவதாரங்களில் குணங்கள் நிரம்பியிருக்கின்றன வென்பதும், இருட்டறையில் விளக்குப்போலே ப்ரகாசிக்கின்றன வென்பதும் உண்மை. "ஸர்வஸஹிஷ்ணுரர்ச்சகபராதீநாகிலாத்மஸ்திதி:" என்று பட்டர் ஸாதித்திருப்பதையும் இவர் எடுத்துக் காட்டியிருக்கலாம். இவற்றின் பொருளை இன்று இவர் அறியப் பெறுக; அபராதங்களுக்குத் தக்க தண்டனைகளை உடனுக்குடனே செய்துபோருகிற அரசர்களைப்போ லல்லாமல், அர்ச்சையெம்பெருமான் நெடுநாள் ஸஹித்திருப்பன். "அரசன் அன்று கொல்லும்; தெய்வம் நின்று கொல்லும்" என்று மூதறியுமம்மனைமார் சொல்லுவது.

அடுத்த பாராவில்—"ஸமஸ்த ப்ராணி ஸந்த்ராண சீலர்களாக விளங்கும் அர்ச்சாவதார எம்பெருமான்களை வஸிஷ்ட சண்டாள விபாகமறக் குளிரக் கடாக்ஷிக்க ப்ரார்த்திப்பது நம்முடைய ஸ்வரூப மல்லவா?" என்கிறார். இதற்கும்

தினவடங்கச் சொல்லவேண்டி யிருக்கிறது. ஈச்வரன் ஸர்வஸமன்; வஸிஷ்ட சண்டாள விபாகம் பாராதவன் என்று சொல்வது உண்டு. இதன் பொருளை ஸாமாந்யர்கள் அறியார்கள்; அறிவிக்கிறோம். கீதாசார்யன் கீதையில்

"ஸமோஹம் ஸர்வபூதேஷு ந மே த்வேஷ்யோஸ்தி ந ப்ரிய:"

என்று சோதிவாய் மலர்ந்தருளினன். அங்குப் பாஷ்யம் செய்தருளின ஸ்ரீராமாநுஜர் "தேவர்கள் திர்யக்குக்கள் மநுஷ்யர்கள் ஸ்தாவரங்கள் என்கிற வாசியின்றிக்கே தாழ்ந்தோர் உயர்ந்தோர் என்கிற வாசியு மின்றிக்கே எல்லாரும் என்னை ஆச்ரயிக்கலாம்படி நான் ஸமனுயிருக்கிறேன்" என்று விவரணம் காட்டியுள்ளார். ஆச்ரயிப்பது என்பதற்கு— கோவில்களில் வந்து ஆச்ரயிப்பது என்று அர்த்தமல்ல. கோவில்களில் வந்து ஆச்ரயிப்பது என்று வந்தால் அப்போது அதற்கேற்ற சாஸ்த்ரங்களை அவச்யம் அநுஸரித்தே யாகவேண்டும். வேண்டா மென்னில், அந்த சாஸ்த்ரங்களையாவது நீரில் விடுவதோ தீயிலிடுவதோ செய்யவேண்டும். இந்தக் கோவிலில் பாத்ம ஸம்ஹிதைப்படி ஆராதநம், இந்தக் கோவிலில் ஈச்வர ஸம்ஹிதைப்படி, இந்தக் கோவிலில் பாரமேச்வர ஸம்ஹிதைப்படி, என்றிங்ஙனே அநாதியாகவுள்ள வ்யவஸ்தைகளுக்கு ஜலாஞ்ஜலியே யாகவேணும். அர்ச்சகர்கள் இன்னது செய்வது, பரிசாரகர்கள் இன்னது செய்வது, ஸேவார்த்திகளில் இன்னார் இன்னது செய்வது, என்கிற முறைமைக ளெல்லாம் அழிய நேரும். எது கொண்டு எதை விதிப்பது? எதை மறுப்பது? எப்படி ராஜாஜ்ஞையோ அப்படி நடப்பது என்கிற இவ்வொரு சட்டமே ஓங்கி நிற்குமாகில் அங்குத் தைவஸாந்நித்யம் எப்படியிருக்கும்? தைவ ஸாந்நித்ய ஹேதுக்களில் பெரியார்களுடைய மங்களாசாஸநமே தலையானது. அது இல்லையானபோதே ஸாந்நித்யமு மில்லையென்று தேறிநிற்பதில் என்ன ஸந்தேஹம்?

ஜிதந்தா ஸ்தோத்ரத்தில் நான்முகன் 'தேவாநாம் தாநவாநாம் ச ஸாமாந்ய மஸி தைவதம்' என்கிறுன். ஈச்வரன் தேவர்களுக்கும் ஆஸுர ப்ரக்ருதிகளான அஸுர ராக்ஷஸர்களுக்கும் ஒரு நிகராகவுள்ளவன் என்றது இதனுல் ஏற்படுகின்றது. உண்மையில் இப்படியிருக்கிருனே வென்று பார்க்கவேண்டும். தேவர்களைக் காத்து அஸுர ராக்ஷஸர்களை வேறுத்ததாகவே கதைகள் காணப்படுகின்றன. "அமரர்க்கு இடர்கெட அசுரர்கட் கிடர்செய்" என்கிறுர்கள் ஆழ்வார்கள். 'ஸமோஹம் ஸர்வபூதேஷு' என்று தன் வாயினுல் சொல்லிக்கொண்டும் 'தேவாநாம் தாநவாநாஞ்ச ஸாமாந்ய மதிதைவதம்' என்று தத்வதர்சிகளின் வாக்கினுல் சொல்லுவித்துக்கொண்டு மிருக்கிற பகவான், எதுக்கு இப்படி அமரர்களுக்கு இடர் கெடுப்பவனுகவும் அசுரர்களுக்கு இடர் செய்பவனுகவும் இருக்கவேண்டும் என்று கேள்வி பிறந்தால் தத்வவித்துக்கள் மிக வழகிய பதிலைச் சொல்லியே தீருகிறுர்கள். 'ச்ருதிஸ் ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா' என்றபடி எம்பெருமானது அநாதியான கட்டளை யுண்டு. அந்தக் கட்டளையைத் தழுவி நடப்பவர்கள் அநுக்ரஹத்திற்கு இலக்கு; மீறி நடப்பவர்கள் நிக்ரஹத்திற்கு இலக்கு என்பதாக. நிர்ஹேதுக க்ருபை, க்ஷமை, வாத்ஸல்யம் முத

லான மஹா குணங்கள் அவனுக்கு இல்லையென்று யாரும் சொல்லவில்லை. அவை விசேஷமாக உண்டு. அவற்றுக்கு இன்னாரிலக்கு என்பதை அவன் திருவுள்ள மறியு மத்தனை. அவனது கட்டளையான சாஸ்த்ரங்களுக்கு அஞ்சி நடப்பதே ஒவ்வொருவர்க்கும் கடமை.

இனி, முடிவு பாராவில் தம்முடைய வாதங்களை நிகமிக்கிறார். அவ்வளவும் அஸம்பத்தம் என்று முடிக்கப்பட்ட தாயிற்று. இப்போது நடந்திருக்கிற ஸம்பவங்களைப் பகவத் ஸங்கல்பமாகக் கொள்ளவேணு மென்கிறார். உலகில் அதர்க்கணமாக நடக்கும் கொள்ளைகள் களவுகள் மோசங்கள் முதலானவற்றையெல்லாம் பகவத் ஸங்கல்பமாகக் கொள்ள முடியுமானால் இதையும் அப்படியே கொள்ளத் தட்டில்லை யென்று முன்னமே பதில் தெரிவித்திருக்கிறோம். முடிவாக, தேவாலயங்களில் ஏற்கெனவே யுள்ள குற்றங் குறைகளைப் போக்கவேணு மென்பதை வற்புறுத்துகிறார். இந்த வார்த்தையில் இவர் பிடியுண்டிருக்கிறா ரென்பதை யாவரும் கவனிக்கவேணும். ஆலயங்களில் குற்றங் குறைக ளிருப்பனவாக இவர் தெரிவிக்கிறாரே; எதையும் இவர் நற்றமும் நிறையுமாகவே நினைக்கலாமே. இன்னது குற்றம் இன்னது குறை என்பதை இவர் எது கொண்டு நிர்ணயிக்கிறார்? அப்படி நிர்ணயிக்கும் ப்ரமாணம் சாஸ்த்ரமோ சிஷ்டா சாரமோ ஆகவேண்டும். வேறு எதுவு மாகாது. அந்த ப்ரமாணந் தானே அரிஜன ப்ரவேசத்தையும் குற்றங் குறையாக நன்கு நிர்ணயித்திருப்பதால், இதுவும் போக்கத்தக்கதே யென்று இவருடைய வ்யாஸத்தாலேயே முடிந்து நின்றது.

ஸ்ரீ:

சிசுவும் தெய்வமும்

ஒரு சிறு குழந்தையிடம் மிகவும் அன்பு செய்தேன். களங்க மற்ற அக் குழந்தையின் உள்ளம், அதை இருமடங்கு என்னிடம் திருப்பி யளித்தது. இக்குழந்தையால் அடியேன் கண்ட பெரிய தத்வங்கள் பலப் பல. என்னைக் கண்டு தாவும் குழந்தை, நமக்கு இயற்கையாகத் தெய்வத்தினிடம் இருக்க வேண்டிய சேஷத்வத்தை வெளிப்படுத்திற்று. பந்து, புட்டிகள், இவற்றுடன் விளையாடும் குழந்தை, இடையிடையே ஓடிவந்து என்னைத் தழுவி இறுகப் பிடிப்பது, உலக இன்பங்களில் ஈடுபடும் நாம் இடையிடையேனும் இறைவனை நினைத்து வாழ்த்தி, அவன் ஸம்பந்தத்தை திடப்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதை வெளிப்படுத்தியது. அந்தக் குழந்தையை எடுத்துச் செல்லவேண்டுமென்றால், நானன்றிப் பிறர் சென்று கூப்பிட முடியாது. இது, பரமைகாந்திகள் ஸர்வேச்வரனை யன்றிப் பிற தெய்வங்களை மதியார் என்பதற்கும், கஜேந்த்ரன் போன்ற அடியார்களின் ஆசை யடங்க அச்யுதன் தானே நேரில் வரவேண்டுமென்றதுமான உயர்ந்த தத்வங்களை ப்ரகாசப்படுத்துகிற தல்லவா? சிறிய ஞானத்தளான என் சொற்களைப் பெரியோர் பொறுத்தருள்க.

ஸ்ரீ. கோதாராணி

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பஞ்சம ஜாதி தத்வம்

[ஸ்ரீ. உப. மதுராந்தகம். தி. ஈ. வீரராகவாசார்ய ஸ்வாமி,
ஸம்ஸ்க்ருத காலேஜ், திருவையாறு.]

‘தேவாலயங்கள்’ என்கிற மகுடத்தின்கீழ், சென்ற மாதத்தில் ப்ரசுரமாகிய வ்யாஸத்திற்கு ஸமாதாநம் இங்கு விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறேன்.

சில வர்ஷங்களுக்கு முன், ‘சண்டாள ஜாதிபோன்ற அஸவர்ண ஜாதியைப்பற்றி வேதங்களில் யாதொரு ஆதாரமும் இல்லை’ என்பதாக ஓர் ஆக்ஷேபம் கிளப்பினர்கள் சீர்திருத்தவாதிகள். வேதங்களைக் கொண்டே அதற்கு ஆதாரம் காட்டினர்கள் வைதிகர். சாந்தோக்ய உபநிஷத்தில்:

“ய இஹ கபூயசரணா:—கபூயாம் யோநிமாபத்யேரந் ச்வயோநிம் வா ஸூகரயோநிம் வா சண்டாலயோநிம் வா”

என்றுள்ளது என்றும், ச்ருத ப்ரகாசிகாசார்யர் வ்யாக்யாந மிட்டருளின ஜாபாலோபநிஷத்தில் ப்ரஹ்ம க்ஷத்ரிய வைச்ய சூத்ர ஜாதி நான்கையும் ஸ்ருஷ்டித்த பிறகு நிஷாத ஜாதியை ஸ்ருஷ்டி செய்ததாக ‘ச்வாநாந்நிஷாதா:...... ஸஜாயந்த’ என்றிருக்கிறது என்றும், ‘ப்ரஹ்மதாசா: ப்ரஹ்மதாஸா: ப்ரஹ்மைவேமே கிதவா:’ என்பதாக ஆதர்வணத்தில் தாஸ கிதவாதி ஜாதியைச் சொல்லியுள்ளதென்றும், இத்யாதி ப்ரமாணங்களை வைதிகர் ஆதாரமாகக் காட்டினர்கள். அதோடு அந்த வாதம் நின்றது. பிறகு ‘அந்த சண்டாளர் இன்னர்தாம் என்பதாகத் தீர்மானிப்பது எப்படி?’ என்பதாக மற்றொரு வாதம் கிளம்பிற்று. அந்த வாதமே ‘தேவாலயங்கள்’ என்கிற வ்யாஸத்தில் இப்போது காணப்படுகிறது. இதில் மேற்கண்ட வ்யாஸ கர்த்தா ஸ்வாமி நான்கு ஜாதிகளை இசைந்து, ஐந்தாவது வர்ண மொன்றில்லை என்பதாகவே தீர்மானித் திருப்பதாகத் தெரிகிறது.

‘ஸந்தீஹ வர்ணஸம்ஸாரேஷ்வாசாரே சாஸ்த்ரஜே ।
சண்டாலே ச சாதிநீசத்வே கா ஜாதிவ்யவஸ்திதி: நா?’

என்றும்,

‘ந சைதத்விந்மோ ப்ராஹ்மணா வா ஸ்மோ வயமப்ராஹ்மணா வா’

என்றும், இவ்வாறாக ஸவர்ண ஜாதிப் பிரிவையே சார்வாக மதஸ்தர் ஆக்ஷேபித்திருக்கிறார்கள். இவ்வாக்ஷேபங்களுக்கு ஆசார்யர்கள் தகுந்த ஸமாதாநமும் விரிவாக அருளியிருக்கிறார்கள்.

முஸ்லீம்கள் வெள்ளையர் போன்றவர்கள், நான்கு வர்ணத்தி லடங்கியவர்களாக அவர்களும் இசையவில்லை. யாமும் அவர்ணர் என்றே அவர்களைக்

கொண்டுள்ளோம். 'நாஸ்தி து பஞ்சம:' என்ற மநுவே அநுலோம ப்ரதிலோம ஜாதிகளை ஶாஸநம் செய்திருக்கிறார். அநுலோம ஜாதிகள் ஆறு; ப்ரதிலோம ஜாதிகள் ஆறு; அநுலோம ப்ரதிலோமர்கள் பரஸ்பர ஸம்பந்தத்தால் ஏற்பட்டுள்ள ஜாதிகள் நாற்பத்தெட்டு. ஆக: அவர்ண ஜாதிகள் அறுபது என்பதாக பல ஸ்ம்ருதிகளைக் கொண்டு நிபந்தநக்காரர்கள் நன்றாய் விளக்கியுள்ளார்கள். ப்ரதிலோம ஜாதி ஆறுக்குள் 'சண்டாலஶ்சாதமோ ந்ருணாம்' என்று மநுவே ஶாஸநம் செய்திருக்கிறார். ஆகவே 'நாஸ்தி து பஞ்சம:' என்ற மநு ஐந்தாவது ஸவர்ண ஜாதியில்லை என்றாரே யன்றி, அவர்ண ஜாதியைத் தாமே சொல்லி வைத்து அதற்கு முரண்பட்டு அதை இல்லை செய்யவில்லை.

ஒவ்வொரு வர்ணத்தாரையும் ஆச்ரமத்தாரையும் இன்னாரென்று வெளிப்படையாகக் காட்டக்கூடிய பாஹ்ய சிந்ஹங்கள் உண்டு. த்ரிதண்டம் காஷாயம் போன்றவைகளால் ஸந்யாஸி என்றும், கச்சத்துடன் வேஷ்டி இரண்டு யஜ்ஞோபவிதங்களால் க்ருஹஸ்த னென்றும், கச்ச மன்றியில் ஆடை ஒரு உபவீதம் ஆகியவற்றைக்கொண்டு ப்ரஹ்மசாரி என்றும் அறிகிறோம். அவைபோலவே சண்டாள ஜாதிக்கும் வகுத்த அடையாளங்கள் பலவுண்டு. த்ரிசங்குவைப்பற்றி இதிஹாஸ ச்ரேஷ்டத்தில்,

"ஏகஸ்யாம் து வ்யதீதாயாம் ராஜா சண்டாலதாம் கத:। நீலவஸ்த்ரதரோ நீல: பருஷோ த்வஸ்தமூர்தஜ:। சித்யமால்யாநுலேபஶ்ச ஆயஸாபரணோ(அ)பவத்। தம் த்ருஷ்ட்வா மந்த்ரிண: ஸர்வே த்யக்த்வா சண்டாலரூபிணம்। ப்ராத்ரவந் ஸஹிதா ராம பௌரா யே(அ)ஸ்யாநுகாமிந:"

என்று வெளி அடையாளங்களும் தீண்டாமையும் விரிவாக வுள்ளன. மநுஸ்ம்ருதி முதலியவற்றிலும், அவர்கள் வஸிக்கவேண்டிய இடம் அடையாளங்கள் முதலியவை ஐயமற வுள்ளன. பல்லாயிரக் கணக்கான வர்ஷங்களாகக் கூடியவரையில் இவ்வடையாளங்கள் இன்றளவும் காண்கின்றன. ஸவர்ணரிடமும் அவர்ணரிடமும் குறிப்பிட்ட வெளி யடையாளங்கள், இடம், குலாசாரம், லோகவ்யவாஹரம் போன்றவை போதுமானவை யன்றோ? இன்னார் ப்ராஹ்மணர் இன்னார் நான்காம் வர்ணத்தவர் என்பதற்குள்ள ஆதாரம்போல், பஞ்சமர் இன்னா ரென்பதற்கும் ஆதாரம் போதுமானதாகவே காணப்படுகிறது. நாளடைவில் இவ்வடையாளங்களை யெல்லாம் நாங்கள் மாற்றி விடப்போகிறோமே என்பதாக நினைக்கலாம். அந்தக் காலத்தில் ஸவர்ண ஜாதி பேத மிருப்பதில்தான் என்ன நம்பிக்கை? இந்தப் பேதமும் அடியோடு கூடா தென்பதாக மஹாத்மா அரும்பாடு படுகிறா ரன்றோ? அவரைப் பின்பற்று மிவர் நான்கு ஜாதிகளை மட்டில் இசைந்து, ஐந்தாவது ஜாதியை ஆக்ஷேபிப்பது பொருத்த முள்ளதாமோ?

மனிதனுடைய உடலிலேயே மேல் கீழ்ப் பாகங்கள் ஸ்ப்ருச்யாஸ்ப்ருச்ய விபாக முள்ளனவே. ஜநந மரணாதி ஆசௌச காலங்களிலும், ஸ்த்ரீகளின்

மாதவிடாய் காலங்களிலும், அஸ்ப்ருச்யதையை இவரும் பரிபாலித்து வருவதாகவே தெரிகிறது. மனிதனுக்கு மனிதன் தீண்டாதவனாகக் கூடுமா?

ப்ராஹ்மண ஸ்த்ரியிடம் சூத்ரனுக்குப் பிறந்தவன் சண்டாளன். ஆகவே இக்காலத்தார் அவ்வகையிற் சேர்ந்தவ ராகார் என்பதாக இந்த ஸ்வாமி ஏற்கெனவே சிரகாலமாக எழுதி வருகிறார். ப்ரஹ்மத்தின் முகம் முதலியவற்றிலிருந்து ப்ராஹ்மணர் முதலிய ஜாதியார் உண்டாயிருப்பதாக வேதத்திலுள்ளதே. இக்காலத்து ப்ராஹ்மண க்ஷத்ரிய வைச்ய சூத்ராதிகள் அவ்வாறு உண்டாகாமையால் ப்ராஹ்மணாதி ஜாதியைச் சேர்ந்தவ ராகார் என்றும் ஆக்ஷேபிக்கலாமே? கோமயத்திலிருந்து வ்ருச்சிக முண்டாவதை நேரில் காண்கிறோம். ஸூத்ர பாஷ்யாதிகளிலும் இவ்வுதாஹரணம் காணப்படுகிறது. பிறகு வ்ருச்சிகத்திலிருந்து உண்டாகுமதும் வ்ருச்சிகம்தானே? அரிசியிலிருந்து புழு உண்டாவதும், புழுவிலிருந்து புழு உண்டாவதும் கண்கூடானது. அது ஒரே இனமே என்றும் கொண்டிருக்கிறோம். அப்படியே ஆதி ஸ்ருஷ்டியில் முகாதிகளிலிருந்தும், பிறகு பரஸ்பரம் ஸ்திரீ பும் யோகத்தாலும் அதே ஜாதி என்பதாக க்ரந்தங்களிலே ஸம்ஸ்பஷ்டமாக்கி யிருக்கிறார்கள். ப்ராஹ்மண ஸ்த்ரீக்கும் சூத்ரனுக்கும் பிறப்பவன் சண்டாளனாகிறான். அப்படியே அந்தச் சண்டாளர்க்கும் சண்டாள ஸ்த்ரீயினிடம் பிறப்பவனும் சண்டாளனே.

மேலும் ப்ராஹ்மண ஸ்த்ரீக்கும் சூத்ரனுக்கும் பிறக்குமவன் சண்டாளனே என்பதாக இசையுமிவர், சண்டாளர் பரஸ்பர ஸம்ச்லேஷத்தில் பிறக்கும் சிசுவுக்கு ஏதேனுமொரு ஜாதியை இன்னதென்று குறிப்பிடவேண்டும். ஸவர்ணரான நான்கு ஜாதிக் குட்பட்டவனென முடியாதே. வேறு என்றபோது, நான்கிலும் வேறு ஜாதி ஐந்தாம் ஜாதி என்று ஏற்படுகிறதன்றோ? இன்ன ஜாதி யென்று அறிய இயலாதவனையும் 'அஜ்ஞாதஜாதிவர்ணாஞ்ச' என்று ஆலயப்ரவேசத்திற்கு அநர்ஹரென்றே ஆகமங்களில் சொல்லியுள்ளது. பரஸ்பர வர்ண ஸாங்கர்யத்தால் பிறந்தவர்கள் ஜாதி அறுபது விதமாக வகுக்கப்பட்டுள்ளது. அவர்களுள் ச்வபாக புல்கஸாதி விபாகமும், அவர்களின் ஆசார வ்யவஸ்தைகளும் சாஸ்த்ரங்களிலே விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன.

"ஹரிஜந ஸமுதாயத்திற் குள்ளும் வேறுபாடுகளுண்டு; அந்யோந்ய விவாஹ ஸஹபோஜநாதிகள் அவர்களுக் கில்லை; இவர்களெல்லாம் ஒரே ஜாதியா? அல்லது வெவ்வேறு ஜாதிகளா? ஒருவரு மிதை ஆராய்வாரில்லை" என்கிறார் ஸ்ரீ. வி. பா. ஐயங்கார். ஸ்தூலமான ஹரிஜந ஜாதியையே இந்த ஸ்வாமி மறுக்கும்போது, அதற்குள் பிரிவைப் பற்றிய ஆராய்ச்சி எதற்காக? ஆலய ப்ரவேச சர்ச்சையானது பொதுவாகச் சண்டாள ஜாதியையும் அவர்கள் சேர்க்கையால் பிறக்கு மவர்களையும் பற்றியதே. இந்த ஸ்வாமியே இனி ஆராய்ந்து உட்பிரிவு உட்பட ஜாதி வ்யவஸ்தை செய்யலாமே. பலர் க்ரந்தங்களில் செய்து மிருக்கிறார்கள்.

"மேற்கண்ட ஜனங்கள் இதுவரையிலே எல்லாப் பெரிய கோவில்களிலும் உட்புகுந்து கலந்து வந்திருக்கும் பஹிரங்க ரஹஸ்யத்தை யார் அறியார்? அதனால் கெடாதது இனிக் கெட இருக்கிறதோ?" என்பதாகக் கேட்கிறார்

18924

இவர். இந்தப் பஹிரங்க ரஹஸ்யத்தை அறியாதார் பலர் வைதிகருண்டு. அறிந்த காலத்தில் யதோக்த ப்ராயச்சித்தங்களும் நடந்திருக்கின்றன. தேசாந்தரத்தில் ஏற்பட்டுள்ள ஜநந மரணங்களின் ஆசௌசமானது, பத்தாவது நாள் நெருங்கிய பந்துவுக்குத் தெரிந்தால், அதற்கு முன் அவன் அறியாமையால் ஆசௌசமோ அதற்கு நிஷ்க்ருதியோ ஏற்படமாட்டாது. அப்படியே ஆராதநாதிகளில் அறியாத தவறுகளுக்குப் பரிஹாரம் தேடுவதெப்படி? இம்மாதிரியான அபுத்தி பூர்வக தோஷங்களுக்கும் பவித்ரோத்ஸவம் ப்ரஹ்மோத்ஸவம் முதலியவை ப்ராயச்சித்த ரூபமாகவும் சொல்லியுள்ளது.

"𑌯𑌦𑍍𑌰𑌾𑌤𑍍𑌰𑍍𑌯𑌾 𑌪𑌾𑌪𑌮𑌕𑌾𑌰𑍍𑌷𑌂 𑌯𑌦𑌹𑍍𑌨𑌾 𑌪𑌾𑌪𑌮𑌕𑌾𑌰𑍍𑌷𑌮𑍍"

என்றாப்போல் அறியாத பாபங்களுக்குச் சொல்லும் ப்ராயச்சித்தமாக ஸந்த்யாவந்தநாதிகளிருப்பதைக் கொண்டு புத்திபூர்வகமான ஆஸௌசாதிகளுக்கும் இதுவே ப்ராயச்சித்தமாகுமா? சண்டாளர் பஞ்சம ஜாதி என்பதாக ஆழ்வார் அநுஸந்தாநம்.

'குலந்தாங்கு சாதிகள் நாலிலும் கீழிழிந்து எத்தனை
நலந்தா னிலாத சண்டாள சண்டாளர்க ளாகிலும்'

என்பது நம்மாழ்வார் பாசுரம். குலந்தாங்கு சாதிகள் நாலு; ஸங்கர ஜாதி என்று ஒரு கோவையாக்கிப் பஞ்சமர் என்கிறது. பொதுப் பெயரன்றிக்கே விசேஷித்துச் சொல்லும்போது சண்டாளர் ச்வபசர் என்று வழங்குகிறது.

'𑌚𑌾𑌣𑍍𑌡𑌾𑌲 𑌪𑍍𑌲𑌵 𑌮𑌾𑌤𑌙𑍍𑌗 𑌦𑌿𑌵𑌾𑌕𑍀𑌰𑍍𑌤𑌿 𑌜𑌨𑌙𑍍𑌗𑌮𑌾𑌃 ;
𑌨𑌿𑌷𑌾𑌦𑌶𑍍𑌵𑌪𑌚𑌾𑌵𑌨𑍍𑌤𑍇𑌵𑌾𑌸𑌿𑌚𑌾𑌣𑍍𑌡𑌾𑌲 𑌪𑍁𑌕𑍍𑌕𑌸𑌾𑌃'

என்பதாகப் பத்து நாமாக்கள் கோசங்களிலுள்ளன. இவர்களுக்கு இடம் அடையாளம் முதலியவை,

"𑌚𑌾𑌣𑍍𑌡𑌾𑌲𑌶𑍍𑌵𑌪𑌚𑌾𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌬𑌹𑌿𑌰𑍍𑌗𑍍𑌰𑌾𑌮𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌤𑌿𑌶𑍍𑌰𑌯𑌃"

இத்யாதியாக மநு ஸ்ம்ருதி பத்தாவது அத்யாயத்தில் விளக்கியுள்ளன. இவர்கள் தீண்டாதார் என்பதை ஸ்ரீ. பாஷ்யம் அய்யங்கார் ஸ்வாமியே மனப்பூர்வமாய் இசைந்து, பஞ்சஸம்ஸ்காரம் பெற்ற சண்டாளருக்குத் தீண்டாமை விலகிவிடுகிறது என்பதாகச் சில வர்ஷங்களுக்கு முன்னே வேதாந்த தீபிகையில் ப்ரசுரம் செய்துள்ளார். அதற்கு மறுப்பாக அடியேனுடைய வ்யாஸமும் தீபிகையில் ப்ரசுரமாகியிருக்கிறது.

நம்பாடுவான் சரித்ரம் வராஹ புராண ப்ரஸித்தமானது. கைசிக த்வாதசியன்று ஆலயங்தோறும் பட்டர் வ்யாக்யாநத்துடன் அந்தச் சரித்ரம் அநுஸந்திக்கப் படுகிறது. ஸ்வஜாத்யநுரூபமாக ஆலயத்திற்கு வெகு தூரத்தில் நின்றுகொண்டு அவர் பகவானைப் பாடிவந்தார் என்பதாக மேற்படி புராணத்திலும் பட்டர் படியிலுமுள்ளது. திருப்பாணாழ்வாரும் அப்படியே ஆலயம் புகாமல் வெளியிலேயே அரங்கனைப் பாடினர்.

"கூழாட்பட்டு நின்றீர்களை எங்கள் குழுவினில் புகுதலொட்டோம்"

என்கிற பாசுரத்தில் 'வஸிஷ்டன் பரமதயாளுவானாலும் சண்டாளனை அக்நிகார்யத்திலே கூட்டிக் கொள்ளானிறே' என்று வ்யாக்யாநித்தருளினர் ஸ்ரீ

பெரிய வாச்சான் பிள்ளை. 'வீடுமின் முற்றவும்' பாசுரத்தில் 'சண்டாள சிருப் பிடத்தை ப்ராஹ்மணர்க்கு ஆக்கும்போது சில கூட்டிச் சில கழித்தன்றே கொள்வது' என்பது வடக்குத் திருவீதிப்பிள்ளை முப்பத்தாறுயிரப்படி.

'ஸநுஜ்ஞாவரிஹாரௌ தெஹஸம்பந்நாஜ்ஜ்யோதிராதிவத்'

என்கிறது ப்ரஹ்மஸூத்ரம். 'ஆத்மாக்கள் எல்லோரும் பகவானுக்கு சேஷ பூதராயிருக்கச்செய்தே சிலருக்குத் தீண்டாமையானது சரீர ஸம்பந்த நிபந்தநம்' என்பதாக ஸ்ரீ பாஷ்யம். அர்ச்சாவதாரம் ஸௌலப்யத்திற்கு எல்லை நிலம்' இதை இசைந்தே ஆகம சாஸ்த்ரங்களில் வ்யவஸ்தை செய்யப்பட்டிருக்கிறது. வைகாநஸாலயத்தில் மற்றவர் ஆராதநம் செய்யப்படா தென்றும், பாஞ்ச ராத்ராலயங்களிலும், ஒரு ஸித்தாந்தத்தைத் தழுவிய ஆலயத்தில் மற்றுமோர் ஸித்தாந்தப்படி ப்ரதிஷ்டார்ச்சநாதிகள் கூடா வென்றும், மீறினால் ஸாந்நித்யம் போய் ராஷ்ரஷ்ட்ர க்ஷோபாதிகள் விளையு மென்றும் கண்டிப்பாய் ஆகமம் சொல்லுகிறது.

"வாஸ்தவத்தில் ஆகம சாஸ்த்ரத்தை ப்ரவர்த்திப்பித்தவன் இத்தகைய குற்றங்களை க்ஷமித்தருளக்கூடிய நிர்ஹேதுக க்ருபாவா னல்லவா?" இத்யாதி யாக, 'தேவாலயங்கள்' என்கிற வ்யாஸத்தில் இந்த ஸ்வாமி வரைந்திருப்பதை எடுத்துக் காட்டி, யாரேனும் எப்படியேனும் பூஜை செய்யலாம் என்பதாகப் பலர் வாதம் செய்ய ஆரம்பிக்கலா மன்றோ? ச்ருதி, ஸ்ம்ருதி, ஆகமம், ஆழ்வார் ஆசார்யர் ஸ்ரீஸூக்தி, அநுஷ்டாநம், இதிஹாஸ புராணாதிகள், இவற்றை யெல் லாம் ப்ரக்ருத விவாத விஷயத்தில் ஆராய்ந்து, அவற்றுக்கு அநுகுணமாக மனதை மாற்றிக்கொண்டு, இந்த ஸ்வாமியைப் போன்ற மஹான்கள் தர்ம மர் யாதையைக் காக்கவேண்டியது ப்ராப்தம். ப்ரக்ருத விஷயத்தில் ப்ராயச்சித்த விதியானது ஸ்வயம்வ்யக்தம் முதலிய க்ஷேத்ரங்களுக்கும் பொதுவாகவே உள் ளது. 'மாநுஷத்திற்கு மாத்ரம் ப்ராயச்சித்தம், மற்றவற்றுக் கில்லை' என்பது ஆகமங்களிலோ மற்றவிடங்களிலோ காணப்படவில்லை. பூஜா லோபத்தில் மாநுஷத்திற்கும் மற்றவற்றிற்கும் தாரதம்யம் சொல்லியிருப்பதை ஆலய ப்ரவேச விஷயமாக்குவதற்கு இடமில்லை.

ஹரிஜநங்களில் பலர் ஆஸ்திகராய் ப்ராசீநமான குலாசாரத்தையே விரும்புகிறார்கள். ஆலயப்ரவேசம் போன்ற கிளர்ச்சிகளில் அவர்களுக்கும் விருப்ப மில்லை. ராஜீய நிலையில் மஹோந்நதியை அந்த ஸமூஹம் பெற்று நன்றாய் க்ஷேம மடையவேண்டு மென்பதே வைதிகர்களின் நித்யாநுஸந்தாநம். ப்ரிட்டிஷார் மஹோந்நத பதவியில் இருந்தும், ஆலய ப்ரவேச உரிமையை அவர்கள் விரும்பவில்லை. அந்நிலையில் நின்று ஹரிஜனங்கள் ராஜ்யநிர்வாஹம் செய்தால், வைதிகரும் அவர்கள் ராஜீய ஆஜ்ஞைக்கு அடங்கி நடக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள். வரம்பை மீறிய விதிகளில் 'காமம் வாதந்த ராஷ்ட்ரெஹா ந கரிஷ்யாமி வொ வச:' என்ற பிராட்டி நிலையையே அவர்கள் பின்பற்றுவார்கள்.

———

ஸ்ரீயை நம:

உலகப் போக்கு

[ஸ்ரீ. உப. V. ஸ்ரீநிவாஸய்யங்கார், பனஸ்வாடி பங்களா, கோரேகான், பம்பாய்.]

ஸாம்யம் வேண்டுமாம்

தத்ஸமயம் உலகில் ஏற்படும் அநேக வித நிகழ்ச்சிகளில், ஸமத்வம் வேண்டும் என்று சில கக்ஷியார் சில காலமாகத் தோன்றிச் சொல்லி வருவது ஒன்று. ஏழை பணக்காரன் கூடா தென்பதும், மனிதர்களுள் உயர்வு தாழ்வுகள் கூடா என்பதும் அவர்கள் கக்ஷி. இவர்கள் பேசுவது முற்றிலும் இயற்கை ஸ்ருஷ்டி தத்வத்துக்கு விரோத மென்று உணராதது துக்கிக்கத் தகுந்தது. ஸ்ருஷ்டி தத்வத்தை ஆராய்ந்து பார்த்தால் ஸாம்யம்தான் ப்ரளய மென்றும் வைஷம்யம்தான் ஸ்ருஷ்டி என்றும் தெரிகிறது. இதை யறியாமல் இயற்கைக்கு விரோதமாக இவர்கள் படும் ப்ரயாஸை எவ்வளவு தூரம் பயனளிக்குமோ தெரியவில்லை. கம்யூனிஸ்ட் கொள்கையையுடைய ரஷ்யா தேசத்திலும்கூட வைஷம்ய புத்தி ஒழிக்கப்பட்டதா? ஸ்டாலின் தலைவர் மேலாயும் மற்றவர்கள் அவர் சொற்படி நடப்பதால் கீழாயு மிருப்பது காணப்படவில்லையா? அவரவர் தோன்றியபடி கட்டுப்பாட்டை மீறிப் பேசுவதால் வரும் தீங்கு இது. எல்லாம் பகவானின் மாயை.

* * * * *

யுத்தத்தை ஒழிக்க முயற்சி

இந்த நூற்றாண்டில் இரண்டு மஹாயுத்தங்கள் நடந்தன. சென்ற மஹா யுத்தம் நடந்ததும், உலக மேதாவிகள் ஒன்று கூடி இனி யுத்தம் வராமலிருக்கப் பலவித முயற்சிகள் செய்து வாய்கொண்டவரை பேசி முடித்தார்கள். அநேக ப்ரமுக ராஜாங்கங்கள் தங்கள் ஸைந்யங்களைக் கட்டுப்பாட்டுடன் குறைத்துக்கொண்டும் கப்பல்களைச் சேதித்தும் யுத்தத்தை ஒழிப்பதற்கு வேண்டிய முறைகளைக் கையாண்டன. (Kellog Peace Pact). அப்படி யிருந்தும் கூட யுத்தத்தில் முறியடிக்கப்பட்டு, ஸைந்யமே யில்லாத ஜர்மனி தேசத்தாரால் மறுபடியும் யுத்தம் துவக்கப்படவில்லையா? உலகம் தோன்றினது முதல் இது வரை யுத்த மில்லாம லிருந்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறோமா? பலமுள்ளது பலமில்லாததை அடிப்பதுதான் ஸ்ருஷ்டியின் பொதுவிதி. அப்படிக்கில்லாமல் இரண்டும் ஒத்திருப்பது விசேஷவிதி.

'ஊநம் ந ஸத்த்வேஷ்வதிகோ பபாதே தஸ்மிந் வநம் கோப்தரி காஹமாநே'

என்று காளிதாஸனால், திலீபன் காட்டுக்குப் போனபோது அந்த இடத்தில் பலமுள்ளது பலமில்லாததை அடிக்கவில்லை என்று ஒரு விசேஷ விதி காட்டப்படுகிறது. அப்படிக்கிருக்க, இயற்கை நீதிக்கு மாறாக ப்ரயத்நப்படுவது ஆகாசத் தாமரையைத் தேடுவதாகும்.

* * * *

தத்ஸமயம் காங்க்ரெஸ் அரசாங்கத்தார், சாஸ்த்ரத்தில் பாண்டித்ய முள்ளவர்களும் மதத்தைப்பற்றிப் பேச அர்ஹதை யுள்ளவர்களுமான மடாதி பதிகளுடையவும் வித்வான்களுடையவும் ஆக்ஷேபத்தைப் புறக்கணித்துச் செய்திருக்கும் இந்த ஆலய ப்ரவேசத்தை, ஸநாதந தர்மத்தில் பற்றுள்ள எவரும் கண்டிக்காமலிருக்க முடியாது. இருந்தாலும் அரசாங்கத்தாரால் இழைக்கப்பட்ட இந்தத் தீங்கால் நம் உயிருக்கும் உயிரான அர்ச்சாரூபமான எம்பெருமானை விட்டு விட முடியுமா? இது பண்டித பாமரர்கள் அனைவர்க்கும் மனக்கவலையை யுண்டு பண்ணிவருகிறது.

ஆலய ப்ரவேசம்

காஞ்சியில் கும்பகோணம் காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கர பகவத்பாதாள் ஸந்நிதியில் கூடிய ஸபையில் இவ்விஷயத்தைச் சர்ச்சை செய்து, அது முடிவுக்கு வரும்வரை 'அர்ச்சகர்கள், பரிசாரகர்கள், தீர்த்தக்காரர்கள் முன் போலவே கைங்கர்யம் செய்துவரவேண்டும்' என்று தீர்மானித்திருக்கிறதாகத் தெரிகிறது. இதில் முக்ய விஷயம் ஒன்று கவனிக்கவேண்டும். இவர்கள் கோயில் களில் கைங்கர்யம் செய்யும்போது அந்த இடத்தில் பகவத் ஸாந்நித்யம் இருக்கிறதென்று கைங்கர்யம் செய்வதா? இல்லை என்று செய்வதா? இருக் கிறதென்றால் அந்த இடம் பரம புநிதமானதே. என் மற்றவர்களுக்குத் தடை வேண்டும்? இல்லை என்றால், பகவத் ஸாந்நித்ய மில்லாத பிம்பத்தை ஆராதிப் பதிலுள்ள தோஷம் ஸம்பவிக்காதா? கைங்கர்யம் செய்யப்போய்த் தோஷத் தையா ஸம்பாதிப்பது? தவிர: பகவத் ஸாந்நித்ய மில்லாத இடத்தில் பஞ்சமர் கள் வந்ததால் அசுத்தி ஸித்தம். அப்படி அசுத்தப்படுத்தப் பட்டவர்கள் கோவிலி லிருந்து க்ருஹத்துக்கு வந்ததும் நீராட வேண்டு மன்றோ? நீராடாவிடில் மற்ற வர்களுடன் கலந்து கொள்வதால் அந்த அசுத்தி பரவுவதுடன், தொடர்ச்சி யாகப் பலகாலம் அசுத்தமாயிருப்பதால் அவர்கள் ப்ராம்ஹண்யமும் போய் விடுமே. பகவத் ஸாந்நித்ய மில்லாத விடத்தில் தீர்த்த பரிக்ரஹம் செய்து கொள்ளலாமா? செய்து கொள்ளாவிடில் செய்த கைங்கர்யத்தின் ப்ரயோஜந மென்ன? ஸ்ரீ பகவத்பாதாள் செய்த தீர்மானம் பொது ஜனங்களின் கஷ் டத்தை நிவ்ருத்தி செய்வதாயில்லை. சில அம்சம் உபாதேயமாயும் மற்றும் சில அநுபாதேயமாயும் சொல்வது அர்த்தஜரதீய ந்யாய மாகாதோ? [அர்த்த ஜரதீய ந்யாய மென்பது ஒரு ஸ்த்ரீ பாதி கிழவியும் பாதி குமரியு மென்று சொல் வது]. பரிகணிதர்களான மஹான்கள் இவ்விஷயத்தைத் தீர விசாரித்துத் தீர்மா னிக்க வேண்டுகிறேன்.

அநஸூயை பிராட்டியைப் பார்த்து, "ஸ்த்ரீகளுக்குத் தைவம் பர்த்தாவே காணும்" என்ன, அநந்தபுரம் பிராட்டி லஜ்ஜித்துக் கவிழ்தலை இட்டிருந்தாள். "நான் இவர் பக்கல் ப்ரவணையா யிருக்கிற இருப்புக்கடி, பெருமாள் பக்கல் உண்டான குணத் தாலே யென்றிறே நாட்டார் நினைத்திருப்பது; தைவ யோகத்தாலே அவர்க்குக் குண முண்டான தித்தனை போக்கி, குணஹீநருமாய் விரூப மானாலும் நான் அவரை விடமாட் டாதே யிருக்கு மிருப்பைக் காட்டலாயிற்றிறே அவரைக் குணங்களோடு வ்யதிரேகித்து வைக்கப்பெற்றதாகில்" என்றருளிறே.

ஸ்ரீ:

செய்திகள்

ஸ்ரீ திருக்கள்ளம் ஸ்வாமியின் வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவம்

திருக்கள்ளம் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ ராமாநுஜ யதீந்த்ர மஹாதேஶிகனுடைய 44-வது வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவம், திருவெவ்வுளூரில், ஸ்ரீ ஸ்வாமியின் பூர்வாச்ரம குமாரர்களின் க்ருஹத்தில், அத்யாபக வேத பாராயண ஸ்ரீ பாஷ்யாதி க்ரந்த காலக்ஷேபங்களுடன், புரட்டாசிமீ 16உ (2—10—47) உபக்ரமிக்கப்பட்டு விசேஷமாகக் கொண்டாடப்பட்ட தென்றும், புரட்டாசிமீ 18உ (4—10—47) ஸம்பாவநாதி ததீயாராதநங்களுடன் சாத்துமறை விசேஷமாக நடைபெற்ற தென்றும், இம்மஹோத்ஸவத்துக்கு ஸ்ரீ ஸந்நிதியி னின்றும் மற்றும் பல உள்ளூர் ஸ்வாமிகளும் விசேஷமாக ஸேவை ஸாதிக்கும்படி யிருந்த தென்றும், ஸ்ரீ. உப. தி. ச. வேதாந்தாசார்ய ஸ்வாமி அறிவிக்கிறார்.

ஸ்ரீமதாதிவண் சடகோப ஸ்வாமி உத்ஸவம், தேரழுந்தூர்

இவ்வூர் ஸ்ரீ அஹோபில மடத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுக்கு, 12—9—'47முதல் 20—9—'47 வரையில் வார்ஷிக மஹோத்ஸவம் ஸ்ரீ ஸந்நிதி சிஷ்யர்களால் வெகு ஸம்ப்ரமமாகக் கொண்டாடப்பட்டது. சாத்துமறை யன்று ஸ்ரீ ஸ்வாமி சத்ர சாமராதி பிருதங்களுடன் ஸ்ரீ ஆமருவியப்பன் ஸந்நிதிக்கு எழுந்தருளி, பெருமாள் தாயார் தேசிகன் முதலிய எம்பெருமான்களை மங்களாசாஸநம் பண்ணிக்கொண்டு ஸ்ரீ தேசிகன் ஸந்நிதியில் கோஷ்டி கண்டருளும்படி யிருந்தது. ராத்ரி வீதி ப்ரமணம் ஆனபின்னர், மீண்டும் ஸ்ரீ ஸ்வாமி மடத்திற்கு எழுந்தருளி, சாத்துமறை வெகு வைபவத்துடன் கண்டருளினர்.

* * * *

தார்மிக ரத்ந ப்ரதீப ஸ்ரீ. உப. N. R. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமியின் 60-ம் ஆண்டு விழா

நிகழும் ஸர்வஜித் வருஷம் புரட்டாசி மாஸம் 20-ந் தேதி (6–10–'47) ம்ருகசீர்ஷ நக்ஷத்ரம் கூடிய சுபதிநத்தில் எமது ஸ. நா. ஸபை ஸ்தாபகரும், மதுரை அட்வொகேட்டும் ஆகிய தார்மிக ரத்ந ப்ரதீப ஸ்ரீ. உப. N. R. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமியின் அறுபதாம் ஆண்டு விழா தேரழுந்தூரில் வெகு விசேஷமாகக் கொண்டாடப்பட்டது. மாலை 5-மணிக்கு மேற்படி ஸபையைச் சார்ந்த பெரியோராலும், மற்றும் பல ஆஸ்திக மஹான்களாலும் மேற்படி ஸ்ரீ க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமியின் குணநலங்கள் பரக்கப் பேசப்பட்டன. இரவு ஒன்பதரை மணிக்கு ஸபா கார்யதர்சியினது வந்தநோபசாரத்துடனும் மங்கள வாத்யங்களுடனும் தாம்பூலாதிகள் வழங்கப்பட்டு ஸதஸ் இனிது முடிவுற்றது.

கடாம்பி. R. நரஸிம்ஹ தாஸன்.

* * * * *

ஸ்ரீ. உப. N. R. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமியின் 60-ம் ஆண்டு விழாக் கொண்டாட்டத்தில், தேரழுந்தூர் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம ஸபையார் ஷை ஸ்வாமிக்கு உவந்தளித்த வரவேற்பிதழ்.

1. செந்தமிழ்ப் பாண்டி நாட்டினிற் சிறந்த திருநகர் மதுரையி னுயர்ந்த
அந்தணர் குலத்தி லவதரித் துள்ள வண்ணலே இனிதிவண் வருக
சுந்தரன் சுருதி நாயகன் சாச ரப்பெயர் பயிலுமிச் சபையின்
தந்தையே வருக 'தார்மிக ரத்ந தீபமே' வருகநீ வருக.

2. எழுத்தினும் சொல்லும் திறத்தினு மேற்கோ ளெடுத்துரை யழகினு ஞானம்
பழுத்தநூ லெதையும் தெரிவுறச் செய்யும் பண்பினு மிருமொழி தனிலும்
வியத்தகு என்.ஆர். க்ருட்ணசா மிப்பேர் விபுதனே வழக்கறி ஞனெனும்
தொழுத்தகு நாமம் பெற்றவ வருக சொன்மழை மேகமே வருக.

ஸபையின் வாழ்த்து

3. ஆண்டொறு நிறைந்ததிரு அழுந்தூராயி ரநாமச் சபையும் வாழி
வேண்டுதல்வேண் டாமையிலான் விளங்கொளிசீ ரடிபோற்றும் வினையோர் வாழி
ஈண்டருள்செய் யீர்ந்தண்டா ரிந்திரைச்சிங் கம்வாழி யிருக்கு வாழி
காண்டலரி தாயபல கனதனவான் களும்வாழிக் கற்றோர் வாழி.

* * * *

ஸ்ரீ தில்லஸ்தாநம் ஸ்வாமியின் உத்தாந மஹோத்ஸவம்

ஸ்ரீ தில்லஸ்தாநம் ஸ்வாமியின் 33-வது வார்ஷிக ஸங்கல்ப மஹோத்ஸவம் சென்ற ஆனிமீ ஸ்ரீரங்கம் ஸ்ரீ தசாவதார ஸந்நிதியில் நடந்த விஷயம் ஸுஹ்ருத்துக்கள் அறிந்திருக்கக் கூடும். ஸங்கல்பாரம்பம் முதல் மூன்று மாத காலமாக ஸ்ரீ ஸ்வாமியினிடம் காலக்ஷேபம் பண்ணிக்கொண்டு ஸ்ரீ ஸ்வாமியை ஆராதித்து வந்த ரிடயர்ட் எஞ்சினீர்கள் ஸ்ரீமான் M. B. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமியும், ஸ்ரீமான் K. S. க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியும், மற்றும் ஸ்ரீரங்கம் மடத்து ஏஜெண்ட் ஸ்வாமியும், இன்னும் சில ஆஸ்திக மஹான்களும் ஸ்ரீஸ்வாமியின் உத்தாந மஹோத்ஸவத்தைச் சிறப்புடன் நடத்திவைத்தனர். ஸ்ரீ ஸ்வாமி (புரட்டாசிமீ 14உ) செவ்வாய்க்கிழமை யன்று திருமுடி விளக்கமானதும், ஸ்ரீரங்கம் தெற்கு ராயகோபுரம் எக்ஸ்டென்ஷனில் இருக்கும் (ஸ்ரீ. உப. மதநகோபாலையங்கார்ஸ்வாமி தேவிகள்) ஸ்ரீ சம்பக லக்ஷ்மி அம்மாளின் ப்ரார்த்தனைக் கிணங்கி, அவளுடைய க்ருஹத்துக்கு எழுந்தருளும்படி யிருந்தது. அங்கு அந்த அம்மாவும் அவள் ஸஹோதரர் ஸ்ரீ. உப. கல்யாணபுரம் C. V. ராஜகோபாலாசார்ய ஸ்வாமியும் மிகுந்த பக்தி ச்ரத்தையுடன் ஸ்ரீ ஸ்வாமியை ஆராதித்தனர். அன்று அங்கு எழுந்தருளி யிருந்த ஸ்வாமிகளுக்குத் ததீயாராதநம் நடந்தேறியது.

கோ. ஸுதர்சந தாஸன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

யோऽந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந் நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

இப்போது நமது தேஶத்தில் மஹா ஜநங்களுக்கு நேரும் ஆதங்கங்களைப் பார்த்து, நாம் இரண்டு மூன்று ஸஞ்சிகைகளில், நமது ராஜ்ய நிர்வாஹகர்களான பெரியோர்களின் ப்ரமத்தைப்பற்றி நமது வியப்பை வெளியிட்டிருந்தோம். 'ஸ்வராஜ்யமாகிற ச்லாக்யமான தசை வரப்போகின்றது; அப்பொழுது நம்முடைய இஷ்டங்களெல்லாம் கைகூடிவிடும்' என்று ப்ரமித்து, அந்த ஸ்வராஜ்யத்தைப் பெறுவதற்காகப் பஞ்சுபடும் பாடு எல்லாவற்றையும் பட்டு நம்மவர் அதை எப்படியோ ஸாதித்துக்கொண்டார்கள். ஐந்தாறு மாஸ காலங்களாக ராஜ்யப் பேற்றால் நேர்கின்ற பரிச்ரமத்தின் பயனை நாம் இப்போது அநுபவித்து வருகிறோம். அவ்விராஜ்ய லாபம் நமக்குள்ளாகவே பெருத்த கலஹத்தை உண்டுபண்ணி, லக்ஷக் கணக்காக மஹாஜநங்களுக்கு ஆத்யந்திக நாஶத்தை விளைத்து விட்டது. குடும்பம் குடும்பமாக எளிய ஜநங்கள் பலர் நாஶமடைந்தார்கள். அந்த நாஶம் இன்னமும் ஓய்ந்த பாடில்லை. எப்பொழுது அது ஓய்வடையுமோ அதுவும் தெரியாது. இவ்வாறு அஸஹ்யமான துக்கங்கள் நேர்ந்தும், இன்னமும் அப்பெரியோர்களுடைய ப்ரமம் தெளியவில்லையே! ப்ரத்யுத, ஒன்று நூறாகப் பெருகி வருகிறது. ராஜ்யச் செல்வமே துக்கத்துக்கு ஹேதுவாக இருக்கின்றதென்பதை அன்னார் அறிந்தும், அவர்களுக்கு அதில் பற்று விடவில்லையே! அந்தத் துக்கம் அவர்களுக்கு ஸுகமாகவே காணப்படுகிறது போலும்!

ஸ்வராஜ்யமும் ப்ரஜைகளின் க்ஷேமமும்

"ப்ராந்திஜுஷாம் பவதாம் பும்ஸாம் ப்ரஹாரோऽபி ஸுகாயதே"

[ப்ரமத்தில் மூழ்கிக் கிடக்கிறவர்களுக்கு ப்ரஹாரமும் (அடி உதை முதலியவைகளும்) ஸுகமாகத் தோன்றும்] என்னும் ஸாமாந்ய நீதி நமது நினைவிற்கு வருகிறது. இந்த ப்ரமத்தின் வேகத்தை ஸ்ரீ கூரத்தாழ்வான் ஸ்ரீ வைகுண்ட ஸ்தவத்தில் வெகு உருக்கமாக ஒரு ச்லோகத்தால் வெளியிடுகிறார்:—

"ஸௌக்யாம்ஸி ஸௌக்ய ச பயம் ந்விதியா நிது:கா
நித்யம் நித்ய து:கபர நீ ஸௌக்ய பரம் ஹரேண ।

𑌦𑍁𑌃𑌖𑌂 𑌵𑌾 𑌨𑌾𑌨𑍁𑌭𑍂𑌤𑌂 𑌵𑌿𑌵𑌿𑌧𑌮𑌸𑌕𑍃𑌦𑍍𑌦𑍁𑌃𑌖𑌂

𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌜𑌙𑍍𑌗𑌮𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌤𑍍𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌭𑌾𑌵𑍇 ॥ ”

[புத்தி ப்ரமத்தினல் திரும்பத் திரும்பப் பல விதங்களான துக்கங்களையும் ஸுக மென்று நினைத்து அநுபவிக்கிறேன். அவைகளுள் பல, அநுபவ தசையிலேயே க்லேஶத்தைக் கொடுக்கின்றன; மற்றும் பல காலாந்தரத்தில் துக்ககரங்களா யிருக்கின்றன. அவைகளையும் ஆவலுடன் தேடுகிறேன். அஹோ! ப்ரமத்தின் மஹிமையை என் சொல்வது?]

இம்மாதிரி ப்ரமமே நமது ராஜ்ய நிர்வாஹகர்களை த்ருடமாக ஆக்ரமித்து நிற்கின்றதென்பது நமது நம்பிக்கை. அவர்களுடைய ப்ரமம் அவர்களுக்கு மாத்ரம் க்லேஶத்தை உண்டுபண்ணுகிறதென்றால் அதுவும் ஒப்புக்கொள்ளத் தக்க தன்றாயினும் அதை ஒருவாறு ஸஹிக்கலாம். அவர்கள் ராஜ்ய நிர்வாஹகர்க ளாக இருக்கிறபடியால், இதர ப்ரஜைகளின் நாஶத்திற்கும் காரணமாக இருக் கும் அவர்களது ப்ரமம் நம்மால் எப்படி ஸஹ்யமாகும்? ‘யதா ராஜா ததா ப்ரஜா:’ என்னும் பீதி அவர்கட்கு ஜநிக்கவில்லையே!

நம்முடைய கஷ்டங்கள் இவ்வளவுடன் நிற்குமென்று சொல்லக்கூட வில்லை. இந்தக் க்லேஶங்களைக் காட்டிலும் பல மடங்கு க்ரூரதரமான வேறு விபத்துக்கள் சீக்ரத்தில் நேரும்போல் இருக்கின்றன. அவைகளை எப்படி ஸஹிப்பதென்பது தெரியவில்லை. அவைகளும் இந்த ஸ்வராஜ்யத்தின் பலங்க ளாகவே தலைகாட்டுகின்றன. அவைகளுள் இரண்டொன்றைப் பராமர்ஶிப் போம்.

இந்த ஸ்வராஜ்யத்தில் இன்னார்தாம் ராஜ்ய நிர்வாஹகர்களாக வருவார்க ளென்று ஒரு நிச்சயமும் சொல்லமுடியாது. ராஜவம்ஶமென்று ஒன்று உண்டென்பதும், அந்த வம்ஶத்தில் ஜநித்தவர்களே ராஜ்ய நிர்வாஹத்திற்கு யோக்யர்களென்பதும் நம் நாட்டில் தொன்றுதொட்டே மறைந்துவிட்டன. அப்படி ஒரு வம்ஶ வ்யவஸ்தை இல்லாவிடினும், ஜ்ஞாநத்திலும் தர்ம புத்தியிலும் சிறந்தவர்களே நிர்வாஹத்தைப் பரிப்பார்களென்று சொல்வதற்கு மில்லை. மஹாஜநங்களுடைய ஸம்மதியை முன்னிட்டு, அந்த மஹாஜநங்களுக்குள் சிலரே நிர்வாஹகர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவதே ஸ்வராஜ்யத்தின் கொள்கை. எவர்களுக்கு அதிக ஜந ஸம்மதி கிடைக்கின்றதோ அவர்களே தேர்ந்தெடுக்கப் படுவராதலால், ராஜ்யம் பலிஷ்டர் வஶமாகவே போவதற்கு இடமுண்டு. அந்தப் பலிஷ்டர்கள் ஸ்வபாவத்தால் அதர்மிஷ்டர்களாகவும், க்ரூர ஸ்வபாவ முள்ளவர்களாகவும் இருக்கும்படி ஸம்பவித்துவிட்டால், ஜகத்திற்கு எவ்விதத் தில் க்ஷேமம் கிடைக்கும்? இப்பொழுதே பற்பல எண்ணங்கள் வெளிப் படுத்தப்பட்டு வருகின்றன. நாட்டிலுள்ள ஸொத்துக்களெல்லாம் அவைகளின் ஸொந்தக்காரர்களிடமிருந்து அபஹரிக்கப்பட்டு, ஸகல ஜநங்களுக்கும் ஸம மாகப் பிரித்துக் கொடுக்கப்படவேண்டுமாம். அதற்கு இசையாவிட்டால் ஸகல ஸொத்தையும் ராஜாங்கத்தார், தாம் ஸ்வாதீநம் செய்துகொண்டு, அவைகளிட

மிருந்து கிடைக்கும் வருமானத்தைத் தங்கள் உசிதம்போல் ப்ரஜைகளுக்குப் பங்கிட்டுக் கொடுப்பார்களாம். ப்ரஜைகளுக்குப் பிறக்கும் குழந்தைகளும் மாதா பிதாக்களிடம் விடப்படக் கூடாதாம். அந்தக் குழந்தைகளை ராஜாங்கத்தார் வஶம் ஒப்புவித்துவிடவேண்டுமாம். சட்டம் ஏற்படுத்துவது அவர்கள் அதீநத்திலிருப்பதால், ஆலய ப்ரவேஶத்திலும் ஜாதிபேதத்தை ஒழிப்பதிலும் விசித்ரமான சட்டங்கள் ஏற்படுத்தியிருப்பனபோல, இதுவிஷயமாகவும் புதிய புதிய சட்டங்களையும் அவர்கள் நிர்மாணம் செய்யலாம். இவைகளெல்லாம் பற்றி உக்ரமமான கிளர்ச்சிகள் இப்போதே உண்டாகியிருக்கின்றன. சீக்ரத்திலேயே இவை அநுஷ்டாநத்துக்கும் வந்து விடுமென்றும் தோன்றுகிறது. ஸ்வராஜ்ய லாபத்தின் பலங்க ளல்லவோ இவை? ப்ரஜைகள் எல்லாரும் ஜ்ஞாநஶாலிகளாகவும் தர்மிஷ்டர்களாகவுமிருந்து அப்பொழுது ஸ்வராஜ்யம் கிடைத்தால், அது ஜகத்தின் க்ஷேமத்தின் பொருட்டாகும். இப்பொழுதுள்ள ஜநங்களை வைத்துக்கொண்டு ஸ்வராஜ்யம் ஸ்தாபிதமானல் ந்யாயமேது? தர்மமேது? ஶாந்தியேது? ஸுகமேது?

“ஸுக²ம் து³:க²ம் ப⁴யம் க்ரோதோ⁴ லாபா⁴லாபௌ⁴ ப⁴வாப⁴வௌ ।
யச்ச கிஞ்சித் ததா²பூ⁴தம் நநு தை³வஸ்ய கர்ம தத் ॥”

[ஸுகமோ துக்கமோ ஶாந்தியோ கோபமோ லாபமோ நஷ்டமோ உத்பத்தியோ நாஶமோ இவையெல்லாம் அநேக ஸந்தர்ப்பங்களில் நம்மால் எதிர்பார்க்கப்படாமலே திடீரென்று நமக்கு இந்த லோகத்தில் ஸம்பவிக்கின்றன. அவையெல்லாம் தைவத்தின் கார்யமே.] ஆகையால் ‘ஸம்ஸித்³தா⁴ஸித்³த⁴யோ: ஸம்ஹ்ருஷ்டாத்மா ந:’ என்கிறபடி நாம் வர்த்தித்துவருதல் வேண்டும்.

*　　　*　　　*　　　*

மலைபோல வந்த மேகம் ஏதோ ஒரு காற்றடித்தது காரணமாகக் கொஞ்சம் விலகுகின்றது. பின்பொருகால் ஒன்று சேர்ந்தாலும் சேரலாம்; நம்புவதற்கில்லை. அதுபோல நமது தர்ம ஸ்தாநங்களைச் சீர்படுத்த வேண்டுமென்று கர்ஜித்தவர்களின் கூச்சல் இப்போதுகொஞ்சம் ஓய்ந்திருப்பதுபோலத் தெரிகின்றது ‘நாஸ்தி நிஜத்வம் தஸ்ய ஸ்வீக்ருதம் த்³ரவிணம் ந:’ என்றபடி, இது நம்பத்தகுந்த தன்று. நமது அரசாங்கத்தார் முதலில் உத்தேஶித்தரீதியில்சட்டத்தைஏற்படுத்திவிடுவார்களென்பதில்ஸந்தேஹமில்லை. ஆனல் கொஞ்ச காலம் வரை அவர்கள் அதிகமாக அக்ரமத்தில் ப்ரவர்த்தியாமல் இருந்தாலும் இருக்கலாம். அதுவரையில் நமக்கு அத்ருஷ்டம். மடாதிபதிகளுடைய ஸ்வாதந்த்ர்யத்திற்கோ, அவர்களுடைய பரம்பராகதங்களான ஆசாரங்களுக்கோ, அதிகமாக மாலிந்யம் உண்டாகாமல் நடந்தாலும் நடக்கலாம். சில அக்ரமங்கள் மாத்ரம் பரிஹரிக்க முடியாமல் ஸம்பவிக்குமென்றே நாம் பயப்படுகிறோம்.

(தர்ம ஸ்தாபநங்களைப்பற்றிய சட்டம்)

இந்தப் புதிய சட்டத்தின் ப்ரகாரம் ஸகல தர்ம ஸ்தாநங்களும் ராஜாங்கத்தார் வஶமாகி விடுகின்றன. அப்போது அவை ஸர்வ ஸாதாரணமாக அவர்களதாகிவிடும். அந்த ஸ்தாநங்களின் தர்மகர்த்தர்களுக்கு ஒருவரையும் அவ்விடம் ப்ரவேஶிப்பதிலிருந்து தடுக்க அதிகாரம் இராது. அசுத்தரான சிலர், தமது அசுத்திபை நினைத்துத் தமது அதிகார மடியாக மடாதிபதிகளுடன் கூடியிருந்து வ்யவஹரிக்கக் கூசினாலும், ஜ்ஞாநஹீநனுக இருக்கும் ஒரு துர்வ்ருத்தன் அவ்விதம் செய்யத் துணியா னென்று உறுதியாகச் சொல்லக்கூடுமோ? வரவு செலவுகளிலும் இப்பொழுது இருக்கும் ஸ்வாதந்தர்யம், சட்டம் அநுஷ்டாநத்திற்கு வந்த பிறகு சில அம்ஶங்களிலாவது பங்க மடையுமென்று தோன்றுகிறது. இவை யெல்லாம் பொறுத்துப் போகக் கூடியவைகளா? தள்ளின வரை லாபமென்று விலகிப் போகும்படியாகத்தான் நேரிடும். இதுவும் தைவக்ருதமான அநர்த்தமே.

*   *   *   *

'ஜகத்துக்குப் பரப்ரஹ்மமே உபாதான காரணம்; அந்த ப்ரஹ்மமே நிமித்த காரணம்' என்பது நமது ஸித்தாந்தம். ஒரு வஸ்து நிர்மாணம் செய்யப்பட்டால், அது எந்தப் பதார்த்தத்தைக் கொண்டு செய்யப்பட்டதோ, அந்தப் பதார்த்தத்தை அந்த வஸ்துவுக்கு உபாதாந காரண மென்றும், அந்த வஸ்துவை நிர்மாணம் செய்யும் கர்த்தாவை அந்த வஸ்துவுக்கு நிமித்த காரண மென்றும் சொல்வார்கள். குடத்துக்கு மண் உபாதாந காரணம்; குயவன் நிமித்த காரணம். அம்மாதிரி இந்த ஜகத்தானது எந்தப் பதார்த்தத்தைக் கொண்டு செய்யப்பட்டதென்பதை விசாரித்து, அது பரப்ரஹ்மத்தைக் கொண்டு செய்யப்பட்டதென்றும், அதை நிர்மாணம் செய்த கர்த்தா யாரென்பதை விசாரித்து, அந்தப் பரப்ரஹ்மமே அதை நிர்மாணம் செய்ததென்றும் உபநிஷத் சொல்லுகின்றது. ஆகையால் 'ப்ரஹ்மமே ஜகத்துக்கு உபாதாந காரணம்; அதுவே நிமித்த காரணம்' என்று வேதாந்திகள் சொல்வார்கள். அப்படியானால், 'குடமும் மண்ணும் ஒரே த்ரவ்யமாக இருப்பதுபோல, ஜகத்தும் ப்ரஹ்மமும் ஒரே த்ரவ்யமாக இருத்தல் வேண்டுமே; அப்படி இல்லையே' என்று ஒரு ஶங்கை ஏற்படுகிறது. 'ப்ரஹ்மமும் ப்ரக்ருதியும் அத்யந்த விலக்ஷணங்கள். அவைகளுள் ஒன்று கேவலம் சேதநம்; மற்றொன்று அசேதநம் அடங்கியது. இவ்வாறு இரண்டும் விலக்ஷண த்ரவ்யங்க ளாதலால், அவை எப்படி உபாதாநமும் உபாதேயமுமாக இருத்தல் கூடும்?' என்பது தான் ஶங்கை. இதற்கு ஸமாதாநத்தைப் பின் வருமாறு நமது ஆசார்யர்கள் அநுக்ரஹித்திருக்கிறார்கள்.

உபாதாந உபாதேய பாவ விசாரம்

"ப்ரஹ்ம மென்பது அமிச்ரமான [கலப்பில்லாத] வஸ்து வன்று; அது சேதநா சேதநங்க ளடங்கிய ஜகத்தைத் தனது ஶரீரமாக உடைத்தாயிருக்கின்றது. அந்தச் சேதநாசேதநங்கள் ப்ரஹ்மத்தை விட்டுப் பிரியாம லிருக்கும் வஸ்துக்கள். அவைகளுக்கு ஸூக்ஷ்ம மென்றும் ஸ்தூல மென்றும் இரண்டு அவஸ்தைகள் உண்டு. அவை ஸ்ருஷ்டிக்கு முன் இருக்கும்பொழுது ஸூக்ஷ்

மாவஸ்தையிலும், ஸ்ருஷ்டிக்குப் பிறகு ஸ்தூலாவஸ்தையிலும் இருக்கின்றன. இவைகளுள், ப்ரஹ்மமாகிற அம்ஸத்தை 'விஸேஷ்ய' மென்றும், சேதநாசேதநங்களாகிற மற்றொரு அம்ஸத்தை அந்த விஸேஷ்யத்திற்கு 'விஸேஷண' மென்றும் சொல்வார்கள். இரண்டையும் சேர்த்துப் பேசும்பொழுது 'விஸிஷ்ட' மென்று சொல்வார்கள். இவ்வாறு ஒரு வஸ்துவே காரணமாகவும் கார்யமாகவும் இருக்கிறபடியால் த்ரவ்யைக்யம் ஏற்படுகிறது. இப்படி த்ரவ்யம் ஒன்ருகையால், உபாதாந உபாதேய ஸம்பந்தத்திற்கு ஹாநி ஒன்றுமில்லை." ஸ்ரீ பாஷ்யகாரர் இதைப் பின் வருமாறு அநுக்ரஹித்திருக்கிருர்:—

"ஸ்தூ: ஸூக்ஷ்ம சிதசித் ப்ரகாரம் ப்ரஹ்மைவ காரணம் கார்யம் சேதி ப்ரஹ்மோபாதாநம் ஜகத்"

[ஸ்தூல ஸூக்ஷ்ம சேதநாசேதநங்களை ப்ரகாரமாக உடைய ப்ரஹ்மமே கார்யமும் காரணமும். ஆக இரண்டும் ப்ரஹ்மமே யாகையால், அந்த ப்ரஹ்மத்தை ஜகத்துக்கு உபாதாந மென்று சொல்வதில் அநுபபத்தி ஒன்றுமில்லை.] இப்படியே ஸ்ரீ தேஸிகனும்:

"ஜகத் ப்ரஹ்மணோ: ஸ்வரூபதோ அத்யந்த பேதேபி விஸிஷ்ட வேஷேண கார்ய காரணயோரைக்ய ப்ரக்ரியயா ஜகதோ ப்ரஹ்மோபாதாநத்வம் யுஜ்யதே"

[விஸேஷணமாக இருக்கும் ஜகத்தும் விஸேஷ்யமாக இருக்கும் ப்ரஹ்மமும் பரஸ்பரம் ஸ்வரூபத்தில் அத்யந்தம் விலக்ஷணமாக இருக்கையிலும், விஸிஷ்டாகாரத்தை எடுத்துக்கொண்டு பார்த்தால், கார்யமும் காரணமும் ஒரே த்ரவ்யமென்று ஏற்படுகிறபடியால், ப்ரஹ்மம் ஜகத்திற்கு உபாதாந காரணமென்று சொல்வது யுக்தமே.] என்று அநுக்ரஹிததிருக்கிருர்.

இது விஷயமாக உபநிஷத் பாஷ்யத்தில் ஒரு விசாரம் காணப்படுகிறது. அதற்கும், பூர்வாசார்யர்கள் அநுக்ரஹித்திருக்கும் உபபத்திக்கும் ஸ்வல்ப பேதம் தென்படுவதுபோலத் தோன்றுகிறபடியால், அதை இவ்விடத்தில் ப்ரஸ்தாவிக்கிருேம்.

முண்டகோபநிஷத்தில், மஹாஸாலர் என்பவர், தமது ஆசார்யரான அங்கிரஸ்ஸைப் பார்த்து,

"கஸ்மிந்நு பகவோ விஜ்ஞாதே ஸர்வமிதம் விஜ்ஞாதம் பவதி?"

[மண் பிண்டத்தை அறிந்தால் சட்டி பானை முதலிய எல்லாம் அறியப்பட்டவையாகின்றன வன்ருே? அதுபோல எந்த வஸ்துவை அறிந்தால் இந்தக் கார்ய வர்க்கம் முழுவதும் அறியப்பட்டதாகும்?] என்று ஒரு ப்ரச்நம் செய்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விடத்தில் 'இந்தக் கார்யவர்க்கமெல்லாம்' என்பதால், ஸ்தூல சிதசித்தை ஸரீரமாகவுடைய விஸிஷ்ட ப்ரஹ்மம் சொல்லப் படுகின்றதா? இல்லாவிட்டால் விஸேஷணமாகிற ஸ்தூல சிதசித் வர்க்கம் மாத்ரம் சொல்லப்படுகின்றதா?' என்ற ஒரு ஸங்கையைச் செய்துகொண்டு ஸ்ரீஉப

நிஷத் பாஷ்யகாரர் பின்வருமாறு ஒரு நிர்ணயத்தைச் செய்கிறார். "மஹாஸாலர் ப்ரஹ்மவித் அன்றாகையால், ப்ரஹ்மம் என்பது, ஒரு விஸேஷ்யாம்ஸம் ஒரு விஸேஷணாம்ஸம், ஆக இரண்டு அம்ஸங்களையுடைய ஒரு விஸிஷ்டமான வஸ்துவென்னும் ஜ்ஞாநம் அவருக்குஸம்பாவிதமன்றாகையால் முதல்ஸங்கைக்கு இடமில்லை. அதுமாத்ர மின்றிக்கே, அங்கிராஸ் பதில் சொல்லுமிடத்தில், 'தேநேதம் பூர்ணம் புருஷேண ஸர்வம்' [இந்தக் கார்ய வர்க்கம் முழுவதும் அந்தப் புருஷனால் வ்யாப்தமாக இருக்கிறது] என்று உத்தர வாக்யத்தில் 'இதம் ஸர்வம்' [இதெல்லாம் என்பதால் விஸேஷணாம்ஸமே நிர்த்தேஸிக்கப்படுகிறபடியால், ப்ரச்ந வாக்யத்தில் தென்படும் 'இதம்ஸர்வம்' என்பதும் விஸேஷணாம்ஸத்தையே நிர்தேஸித்தல் வேண்டும். ஆகையால் இரண்டாவது பக்ஷத்திற்குத்தான் இடமுண்டென்றுநிர்ணயிக்கிறார். ஆனால், 'ஒன்றை அறிந்தால் தன்மயமானவையெல்லாம் அறியப்பட்டதாகும்' என்று சொல்வதற்கு, அந்த ஒன்றும் தன்மயமான மற்றொன்றும் ஒரே த்ரவ்ய மாகஇருக்க வேண்டும். இவ்விடத்தில் 'ப்ரஹ்மமும் ஜகத்தும் அத்யந்தம் விலக்ஷணங்களல்லவோ?' என்று மற்றொரு விரோதத்தை ஸங்கித்து,

"நஹ்யேகத்ரவ்யத்வமேவோபாதாநோபாதேயபாவே தந்த்ரமிதி நியம:"

[பாதகமில்லை; இரண்டு வஸ்துக்கள் பரஸ்பரம் உபாதாநமாகவும் உபாதேயமாகவும் இருப்பதற்கு அவை இரண்டும் ஒரே த்ரவ்யமாக இருத்தல் வேண்டும் என்றும் நியமமில்லை.] என்று ஒரு வாக்யத்தை அநுக்ரஹித்திருக்கிறார். இது, த்ரவ்யைக்கத்தை ஆதாரமாகக் கொண்டு அநுக்ரஹிக்கப் பட்டிருக்கும் ஸ்ரீ பாஷ்யகார் ஸ்ரீ தேஸிகன் இவர்களுடைய வாக்யங்களுக்கு விருத்தமன்றோ? இப்படி, பூர்வாசார்யர்களுடைய வாக்யத்திற்கு விருத்தமாக ஸ்ரீ உபநிஷத் பாஷ்யகாரர் எப்படி அப்படிப்பட்ட நியமம் வேண்டுவதில்லையென்று ஸாதிக்கிறார் என்பதுதான் ப்ரஸ்துத விசாரம். விரோத மில்லையென்றால் ஸாஸ்த்ரஜ்ஞர்கள் எப்படி விரோதமில்லை என்பதை அநுக்ரஹிக்கவேணுமாய் ப்ரார்த்திக்கிறேன். உபநிஷத் பாஷ்யகார் உபாதாந உபாதேய பாவத்திற்குப் புதிதாக ஒரு லக்ஷணத்தை ஸாதித்துத் தம் ஸித்தாந்தத்தை ஸமர்த்திக்கிறார். அந்த லக்ஷண மென்னவென்பதன் விசாரம் இப்பொழுது ப்ராப்தமில்லை. அதை மற்றொரு ஸந்தர்ப்பத்தில் விசாரிக்கலாம். இப்பொழுது வாஸ்தவமாக இவைகளுக்குள் அபிப்ராயம் பேதிக்கிறதா இல்லையா என்னும் அம்ஸமே விசாரிக்கப்படவேண்டுமென்பதே நம்முடைய ப்ரார்த்தனை.

சதுராநந ஸவநகோப்தா
ஸரிதம் வேகவதீம் அஸௌ நிருந்தந் ।
வரிவஸ்யதி மங்களாநி ஸர்வாஸாம்
பகவாந் பக்திமதாம் யதோக்தகாரீ ॥ 4.

விபாது மே சேதஸி விஷ்ணுஸேது:
வேகவதா வேகவிகாதஹேது: ।

---

4. கீழ் ச்லோகத்தில் ஸம்ஸார ப்ரமமநமாகிற அநிஷ்ட நிவ்ருத்தி சொல்லப்பட்டது. இந்த ச்லோகத்தில் மோக்ஷ ஸாம்ராஜ்ய பர்யந்தமான இஷ்ட ப்ராப்தி சொல்லப்படுகின்றது. கீழ் ச்லோகத்தில் 'ப்ரஜாநாம்' என்று ஸாமாந்யமாக எல்லா ப்ரஜைகளுக்கும் சொல்லப்பட்ட பலம், அவனிடத்தில் பக்தியைச் செய்யும் பக்தர்களெல்லாருக்கும் ப்ராப்தமாகு மென்று விசேஷிக்கப் படுகின்றதென்றும் சொல்லலாம்.

[ப—ரை.] அஸௌ பகவாந்— இந்தப் பகவான், வேகவதீம் ஸரிதம்— வேகவதீ என்னும் நதியை, நிருந்தந்— தகைந்து, (அதனால்) சதுராநந ஸவநகோப்தா—சதுர்முக ப்ரஹ்மாவின் யாகத்தை ஸம்ரக்ஷிக்கிறவனாயிருந்து கொண்டு, பக்திமதாம் ஸர்வாஸாம்— [தன்னிடத்தில்] பக்தியைச் செய்யும் ப்ராணிகளுக்கு, யதோக்தகாரீ—சொன்ன வண்ணம் செய்கிறவனாய், மங்களாநி வரிவஸ்யதி—ஸகல மங்களங்களையும் யதேஷ்டமாகக் கொடுக்கிறான்.

சதுர்முக ப்ரஹ்மாவின் ப்ரார்த்தனைக்கு இணங்கி, 'நான் உன்னுடைய சொற்படி நடக்கிறேன்' என்று சொல்லிக் கொள்பவனாய் யதோக்தகாரியாக ஆவிர்ப்பவித்தா னன்றோ? அதனாலேயே அவனுக்கு அந்த நாமதேயம் வந்ததென்பது ஸ்ரீ தேசிகன் திருவுள்ளம் போல இந்த ச்லோகத்திலிருந்து தெரிகின்றது.

'பக்திமதாம் ஸர்வாஸாம்'— பக்தியைச் செய்யும் ப்ராணிகளுக்கு என்று ஸாமாந்யமாக அநுக்ரஹித்திருக்கிறபடியால், 'பக்தியையுடைய ஸர்வ புருஷர்களுக்கும் அவர்களுடைய ஜந்மம் ஜ்ஞாநம் மற்றை அம்சங்கள், ஆகிய ஒன்றையும் பாராமலே அவன் மங்களங்களைச் செய்கிறான்' என்பது ஏற்படுகின்றது. அந்தப் பக்தியும் ஒரு வ்யாஜமே. 'சொன்ன வண்ணம் செய்கிறேன்' என்று நிற்கும் அவனுடைய ஔதார்யம் எங்கே! தீந சேதநர்களான ஸம்ஸாரிகள் செய்யும் பக்தி எங்கே?

ஸவந:— இதற்கு யாகம் என்பது பொருள்.

5. 'ஸர்வாஸாம் வரிவஸ்யதி'—ஸகல ப்ராணிகளுக்கும் ஸகல இஷ்டங்களையும் காங்க்ஷாதிகமாக வர்ஷிக்கிறான் என்று சொல்லப்பட்ட பலத்தை இந்த ச்லோகத்தால் தாமும் அபேக்ஷிக்கிறார். ஆனால், இவர் அபேக்ஷிக்கும் புருஷார்த்தம் ஐச்வர்ய மன்று; அக்ஷர பத மன்று; பரம பதமு மன்று; ஆனால், அது ஜ்ஞாந விஷயமே. அவன் கொடுக்கும் மங்களங்களுள் இதுவும் அந்தர்ப்பூதம். ப்ரஹ்மாவின் ப்ரார்த்தனை எப்படி ப்ரஹ்மாவிற்கு நிறைவேறிற்றோ, அப்படியே தமது ப்ரார்த்தனையும் நிறைவேறும் என்னும் நம்பிக்கையும் ஸ்வாமிக்கு உண்டு என்பதை உத்தரார்த்தம் விளக்குகின்றது. ஆனால், ப்ரஹ்மாவுக்குப் போல ஸாக்ஷாத் தர்சநம் தமக்கு ஏற்படாமற்போனாலும், அது மாநஸிக ஜ்ஞாநத்திற்கு விஷயமாகலா மென்பதைக் கருதி 'மே சேதஸி விபாது' என்று ப்ரார்த்திக்கிறார்.

[ப—ரை] வேகவதா வேகவிகாதஹேது:— வேகவதீ நதியின் தடைக்குக் காரணமான, விஷ்ணுஸேது:—விஷ்ணுவாகிற அணை, மே—என்னுடைய, சேதஸி—மனஸ்ஸில், விபாது—தெளிவாய் ப்ரகாசிக்கவேண்டும்;

ஸுஂஹொஜயொெ நயஉ௨௱வஜூஉாலீ
உஹஜூ௱க்ஷா ஹயஜெயதீக்ஷா ॥ 5.

ஸ்ரீஉாநு விதாஉஹவயஉ௵வஸிவயஉஉாணஃ
ஸெதெ ஹ௱ஜஜூஸயெ ந வ உஹாஹ௱ஜஜூஃ ।

ஸுஂஹொஜபொெ நஃ—ப்ரஹ்மாவினுடைய, ஹயமெயதீக்ஷா—அச்வமேத ஸம்பத்த மான வ்ரதமானது, யஉ௱வஜூழ—எந்தப் பகவானல் முதலில் அறியப்பட்ட தாய்க் கொண்டு, ஸுஹஂமுக்ஷா—விக்நமற்ற ரக்ஷணத்தை உடைத்தானதாக, ஞுலீக—ஆயிற்றே. பகவான் அந்தத் தீக்ஷையை முதல் முதலாகக் கடாக்ஷித்த தால் அந்தத் தீக்ஷைக்கு இருப்பு ஏற்பட்ட தென்பது கருத்து. ['உவஜூா தழ' என்பதற்கு 'உபதேஶமின்றிக்கே அறியப்பட்ட' என்பது பொருள். அதி லிருந்து கிடைத்த 'உவஜூா' என்பதற்கு, 'மற்றை எவ்விடத்திலிருந்தும் அடையப்படாத ஜ்ஞாநம்' என்று பொருள் கிடைக்கிறது. 'வாணிநெஃ உவஜூா = வாணிந௱வஜூஂ ஹூஃ' 'ஹூாவெதவஃ உவஜூா = ஹூாவெதவொ வஜூஂ ஈாஉாயணழ' என்பவை போல, 'யஷ உவஜூா = யஉ௱வஜூழ' என்பது வடிக்கின்றது. ஆகையால், ஸுஂஹொஜயொெ நதீக்ஷா யஉ௱வஜூழ=ப்ரஹ் மாவின் வ்ரதமானது எவனுடைய முதல் முதலான ஜ்ஞாநத்திற்கு விஷயமாகி, என்று பொருள் கிடைக்கின்றது. இந்த 'உவஜூா' என்னும் ஶப்தம் தனியாக நிற்கும்பொழுது ஸ்த்ரீலிங்கம்; மற்றொரு ஶப்தத்துடன் ஸமஸ்தமாகச் சேர்க் கப்பட்டால், அது நபும்ஸகலிங்கமாக மாறி விடுகிறது என்பதும் கவனிக்கத் தக்கது.]

வெஶாவஶாவிவா த ஹெ த௱:—'வேகவதியின் வேகத்தை அணையாக இருந்து தடுத்ததுபோல, என்னுடைய மநஸ்ஸிலுள்ள விஷய ஸம்பத்தமான வேகத்தையும் அந்த அணை தடுக்கும்' என்பது த்யோதிக்கப்படுகிறது.

ஜெ—பகவத் ப்ரஸாதத்திற்குத் தம்மை அநர்ஹராகப் பாவித்துக்கொண்டு 'என்னு டைய' என்று ப்ரயோகம் செய்கிறார்.

விஹா த௱=விஶெஷெண ஹா த௱— என் மநஸ்ஸை விட்டுப் பிரியாமல் அதிலேயே நித்ய வாஸம் பண்ணவேண்டு மென்பது ப்ரார்த்தனை. உஉ ஆ ஹூஉயெ வதஉதெ ஸாவஜொயஃ [அந்த:புர ஜநங்களுடன் குடியும் குடித்தனமுமாக என்னுடைய ஹ்ருதயத்தில் வந்திருக்கிறான்] என்றன்றோ மற்றோரிடத்தில் ஸ்ரீ ஸ்வாமியின் ப்ரார்த்தனை தென்படுகின்றது! நித்ய வாஸ மன்றோ ஸ்வாமி அபேக்ஷிக்கும் புருஷார்த்தம்!

" அரவத் தமளியினோடு மழகியபாற் கடலோடும்
அரவிந்தப் பாவையுந்தானும் அகம்படி வந்துபுகுந்து
பரவைத் திரை பலமோதப் பள்ளிகொள்கின்ற பிரானை "

என்பது ஸ்ரீ பட்டர்பிரான் அருளிச் செயல்.

6. 'இவனை ஹ்ருதயத்தில் நித்யவாஸம் செய்யவேண்டுமென்று ப்ரார்த்திப்பது மிகவும் அநுபபந்நம். இவன் விடாக்ரேஸரனன்றோ? அப்படிப்பட்டவன் உம்முடைய மநஸ்ஸிலிருந்து ப்ராக்ருத விஷயங்களின் வேகத்தை நிவர்த்திக்க எப்படி யோக்யனு வான்!' என்று ஒரு ஶங்கையைச் செய்துகொண்டு அதற்கு ஸமாதாநத்தையும் அநுக்ர ஹிக்கிறார். 'அவன் ஸ்வயம் அப்படிப்பட்ட விடனுக இருந்தாலும் தன்னை ஆச்ரயித்த வர்கள் விஷயத்தில் வைஷயிக மோஹத்தை நிவர்த்திக்க அவன் அர்ஹனே. எது நமக்கு அஸாத்யமாகத் தோன்றுகிறதோ அதை ஸாதிப்பதற்கு அவன் ஶக்தனே,

ஶ்ரூத்வா விபஞ்சீ ஸ்வஸமாகமம் ஶ்ரூஜா நாம்
ஸ்தாநு ஸ்தாம்பத்ரம் யஸ்ய ஸதா ஸதா நி ॥ 6

அவன் அகடிதகடநா ஸமர்த்தன். இதற்கு நிதர்ஶநமாக அவனுடைய சேஷ்டித மொன்றைக் கூறுகிறேன் கேள். ஒரு காலத்தில் அவன் காஞ்சியில் தனது பக்தனாகிற பக்திஸாரர் பின் 'அவர் போனால் அவருடன் போகிறது; அவர் திரும்பினால் தானும் திரும்புகிறது' என்று தனது கதாகதங்களை நிறுத்தக்கூடாமல் அலைந்து கொண்டிருக்கையிலும், தனது பக்தரான ப்ரஜைகளுக்கு ஸம்ஸார மார்க்கத்தில் நேரும் கதாகதங்களைப் போக்கி அவர்களுக்கு ஶாந்தியைச் செய்கிறானன்றோ! தனது அலைச்சலை நிவர்த்தித்துக் கொள்ள அஶக்தன் மற்றவர்களுடைய அலைச்சலை நிவர்த்திப்பிக்க ஶக்தனாகை இருக்கிறானாகையால், அவன் ஸ்வயம் விடனாகை இருக்கையிலும் மற்றவர்களுடைய மநஸ்ஸிலிருந்து அசுத்தியை விலக்கி அந்த மநஸ்ஸை ஶுத்தமாகச் செய்ய ஶக்தனே' என்பது ஸமாதாநம்.

அவன் உண்மையாக விடனா என்பது வேறொரு கேள்வி. ச்லேஷன் என்கிற அலங்காரத்தை அவலம்பித்து அவனை விடனாக வர்ணிக்கிறார். இது ஒரு சமத்கார விஶேஷம். (1) அவன் ப்ரஹ்மாவின் பத்நியாகிற ஸரஸ்வதியால் ஶுச்ரூஷை செய்யப்பட்டு நிற்கிறான். இது பரஸ்த்ரீ கமந மாகாதோ? (2) அந்த அக்ரமத்தையும் ஏகாந்தத்திற் செய்யவில்லை: தனது தர்ம பத்நியாகிற லக்ஷ்மீ ஸாந்நித்யத்திலேயே செய்கிறான். தனது கீழே அநந்தனென்கிற ஒரு புமானும் இருக்கிறான். இது லஜ்ஜை யற்றவன் செய்யும் ஸாஹஸ க்ருத்யமன்றோ? (3) அவன் அநேக கோபிகளுடன் ஸம்போகம் செய்தவனென்று புராணங்கள் சொல்லவில்லையா? (4) அவனுடைய பரிஜநங்களைப் பார்த்தால் அவர்களுள் ப்ரதாநன் ஒரு புஜங்கம். ['புஜங்கம்' என்பதற்கு 'ஸர்ப்பம்' என்னும் பொருளுடன் 'விடன்' என்னும் பொருளும் உண்டு]. இவ்விதம் சொல்வதெல்லாம் கேவலம் சமத்கார உக்திகள். உண்மை என்னவென்றால்: ஸரஸ்வதி, தான் செய்த அபராதத்திற்கு க்ஷமை கொள்வதற்காகச் செய்யும் ஶுச்ரூஷையைப் பரஸ்த்ரீயின் ஸம்போகம் போலவும், பகவான் ஶேஷ ஶயநத்தில் கண் வளர்ந்துகொண்டிருப்பதை விட ஸம்ஸர்க்கம் செய்வதுபோலவும், நந்தகோகுலத்தில் நடந்த ராஸக்ரீடை முதலிய சேஷ்டிதங்களை விடனுடைய க்ருத்யம் போலவும் வர்ணிக்கிறார். இது ஒரு ரஸவத்தான பரிபாடி.—[இப்படியே

"பூர்வாணி யஸ்ய ஶயநே ஸஜலாம்புஜாக்ஷீணாம்
பூர்வாவதாரஸமயே ஸமபூத் ப்ரஸங்க: ।
ஶ்ரீமாந் ஸ ஶேஷஜநஸம்ஸ்ப்ருஹணாய ஶேதே
ரங்கே புஜங்கஶயநே ஸ மஹாபுஜங்க: ॥"

என்று ந்யாஸ திலகத்தில் ஸ்ரீ ரங்கநாதனுடைய ஶயந வர்ணநம் இந்தப் பரிபாடியை அநுஸரித்துக் காணப்படுகிறது.]

[ப—ரை] ஶ்ரீமாந்—லக்ஷ்மியுடன் நித்யயோகம் பெற்றிருக்கிறவும் [பத்நியுடன் கூட இருக்கிறவும்], விதாமஹவதூபரிசர்யயா பூஜ்யமாந:—ப்ரஹ்மாவின் பத்நியாகிற ஸரஸ்வதியால் [அபராத நிவ்ருத்திக்காக] ஶுச்ரூஷை செய்யப்பட்டவனாகவும் [ப்ரஹ்மாவின் பத்நியாகிற ஸரஸ்வதியால் ஆலிங்கநம் முதலிய உபபோகத்தால் உபசரிக்கப்பட்டவனாகவும்], மஹாபுஜங்க:—கோகுலத்தில் வஸித்த காலத்தில் பெரிய விடனென்று பேசப்பட்டவனாகவும், [பெரிய விடனாகவும்] இருக்கும், ஸ:—அந்த யதோக்தகாரீ, புஜங்கஶயநே— ஶேஷ ஶயநத்தில் [விடர்கள் ஸஞ்சரிக்கும் இடத்தில்], ஶேதே—ஶயநித்துக்கொண்டிருக்கிறான். [விடர்கள் இருக்கும், இடத்திலேயே பொழுது போக்குகிறான்.] [அப்படியிருந்தபோதிலும்] இஹ—இந்தக் காஞ்சீபுரத்தில், பக்தாநுகம்பீ:-பக்தன் [பக்திஸார யோகீ]

ப்ரஶமிதஹயமேதவ்யாபதம் வேதஸோ ய:
ஶ்ரிதஜநபரதந்த்ரம் ஶேஷபோகே ஶயாநம் ।
ஶரணமுபகதாஸ்ஸ்ம: ஶாந்தநிஶ்ஶேஷதோஷம்
ஶதமகமணிஸேதும் ஶாஶ்வதம் வேகவத்யா: ॥ 7.

பின் அவன் போகுமிடமெல்லாம் அலைந்து கொண்டிருந்த, யஸ்ய—எவனுடைய, கதாகதாநி—போவதும் வருவதுமான ஸஞ்சாரங்கள், ப்ரஜாநாம்—ப்ரஜைகளின், பவஸம்ஸரணம்—ஸம்ஸாரத்தில் உழல்வதை, ப்ரத்யாதிஶந்தி—[மறுபடியும் தலையெடுக்க இடங்கொடுக்காமல்] நிவர்த்திப்பிக்கின்றனவோ.

7. கீழ் ச்லோகத்தில், ஸம்ஸ்ருதி மார்க்கத்தில் உழன்று கொண்டிருக்கும் ஜநங்களின் யாதாயாதங்களைப் பகவான் போக்கடிக்கிறுரென்று அநுக்ரஹித்தார். இப்பொழுது அப்படிப்பட்ட ஶரண்யனை ஸ்வயமே ஶரணம் அடைகிறுர்.

[ப—ரை] வேதஸ:—ப்ரஹ்மாவினுடைய, ப்ரஶமிதஹயமேதவ்யாபதம்—அச்வமேத யாகத்துக்கு நேரும் போலேயிருந்த ஆபத்தை நிவர்த்திப்பித்தவனாகவும், ஶ்ரிதஜநபரதந்த்ரம்—[தன்னை] ஆச்ரிதர்களிடம் பராதீநதையைக் கொண்டாடுகிறவனாகவும், ஶேஷபோகே ஶயாநம்— திருவநந்தாழ்வானாகிற படுக்கையில் ஶயநித்துக்கொண்டிருப்பவனாகவும், ஶாந்தநிஶ்ஶேஷதோஷம்—ஒருவித தோஷத்தாலும் ஸ்பர்ஶிக்கப்படாதவனாகவும், வேகவத்யா: ஶாஶ்வதம் ஶதமகமணிஸேதும்—வேகவதி என்னும் நதிக்கு இந்த்ர நீலப் பாறையால் கட்டப்பட்டிருக்கும் அணைபோல ஒரு ஶாச்வதமான அணையாகவும் இருக்குமவனை, [இவ்விதமெல்லாமிருக்கும் ஸ்ரீ யதோக்தகாரியை], ஶரணம்—உபாயமாக, உபகதாஸ்ஸ்ம:—பற்றுகிறேும்.

'ப்ரஹ்மாவின் யாகத்திற்கு நேரும்போல இருந்த விக்நத்தை நிவர்த்தித்தவன்' என்பதால், அவனுடைய ஆச்ரிதர்களின் அநிஷ்டங்களை நிவர்த்திக்கும் தன்மையும், 'ஆச்ரிதர்களிடம் பராதீநதையைக் கொண்டாடும்' என்பதால் அவனுடைய ஸௌலப்யமும், 'ஶாந்தங்களான தோஷங்களை உடைத்தாயிருக்கிறவன்' என்பதால் அவனுடைய பரம ஶாந்தியும், 'இந்த்ரநீலப் பாறையால் கட்டப்பட்ட அணைபோல இருக்கிறுன்' என்பதால் அவன் ஒரு ஶாச்வதமான அவலம்பமாவான் என்பதும், இம்மாதிரி ஆச்ரயணோபயுக்த குணங்களால் நிறைந்தவனாக இருக்கிறபடியால் தாமும் ஆச்ரயிக்கலாமென்று திருவுள்ளம் பற்றி ஶரணம் புகுகிறுர். இந்தக் குணங்களெல்லாம் கீழே இருக்கும் ஆறு ச்லோகங்களால் விவரிக்கப்பட்ட குணங்களே.

ஶாந்தநிஶ்ஶேஷதோஷம்—ப்ரதிஷேதிக்கப்படுமவை யெல்லாம் ப்ரஸக்தங்களாயிருத்தல் வேண்டும். இவ்விடத்தில் தோஷங்களை ப்ரதிஷேதிப்பதற்கு என்ன ப்ரஸக்தி என்று ஶங்கிக்கலாம். கீழ் ச்லோகத்தில் பகவானை விடாக்ரேஸரனாக ஒரு சமத்கார ரீதியை அவலம்பித்து வர்ணித்தாரன்றோ? அதைத் தத்யமென்று யாராவது நினைத்துவிடப்போகிறுர்களே என்று ஶங்கித்து அம்மாதிரியான தோஷமொன்றும் அவனிடம் இல்லையென்று இவ்விடத்தில் பரிஹரிக்கிறுர்.

ஶ்ரிதஜநபரதந்த்ரம்—இவ்விடத்தில் 'ஜந' ஶப்தம் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. இது, ஆச்ரிதன் எவனாக இருந்தாலும், தான், அவனுக்கும் பரதந்த்ரனாகிறுன் என்பதை வெளியிடுகின்றது. ஜாதி முதலான விஶேஷங்களைப் பாராமலிருக்கும் அஶேஷ லோக ஶரண்யனாக இருப்பவன் என்பது தோன்றுகிறது.

ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியாவின் '47 அக்டோபர் மாஸத்துச் சந்தா வரவு

			ரூ.
82	ஸ்ரீ. K. K. ஸ்ரீநிவாஸையங்கார், கிண்டி	...	3
165	,, P. S. ஸ்ரீநிவாஸன், ஸ்ரீரங்கம்	...	3
185	,, ஸ்ரீநிவாஸ ஸௌந்தரம் ஐயங்கார், வீரராகவபுரம், திருநெல்வேலி		3
387	,, D. ராமஸ்வாமி ஐயங்கார், வேப்பேரி, சென்னை	...	6
437	,, G. கோபால ஸ்ரீநிவாஸாசார்யர், காருகுரிச்சி	...	3
635	,, T. M. ஸ்ரீநிவாஸைய்யங்கார், தண்டரை	...	3
677	,, வானமாமலை. வெங்கடரங்க ஐயங்கார், மாதுங்கா, பம்பாய்		3
678	,, R. ஸ்ரீநிவாஸாசார்யர், மயிலாப்பூர்	...	6
681	,, V. ரங்காசாரி, கோயம்பத்தூர்	...	3
694	,, S. V. ராகவன், கல்கத்தா	...	3
704	,, S. சடகோப ஐயங்கார், கும்பகோணம்	...	3
713	,, D. கோபாலாசார்யர், சின்ன காஞ்சீபுரம்	...	3
737	,, K. S. R. ஆசார்யா, கோடம்பாக்கம்	...	5
		மொத்தம் ரூ.	47

Regd. M. 4437.

NOV 1947 MADRAS

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற

கீழ்க் கண்ட புஸ்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில்

விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

		சந்தாதாரர்களுக்கு ரூ. அ	மற்றவர்கட்கு. ரூ. அ.
1.	ஸ்ரீ அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யாநத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	6—8	7—8
2.	உக்தி நிஷ்டாபரணம் ந்யாஸ நிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	0-12	1—0
3.	உக்தி நிஷ்டாபரணோத்யோதம் ,,	0—8	0-12
4.	வீக்ஷாரண்ய க்ஷேத்ர மஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யாநம் (க்ரந்த லிபி)	... 1—0	1—8
5.	ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி)	... 0—8	0-12
6.	ஸ்ரீ வீரராகவ ஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	0—3	0—4
7.	ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸங்-க்ரஹம் (க்ரந்த லிபி)	2—0	3—0
8.	ஈஶாவாஸ்ய, கேந, கடோபநிஷத் (நாகர லிபி, தமிழ் மொழி பெயர்ப்புடன், 160 பக்கம்)	1—0	1—8

(தபால் செலவு வேறு)

வேண்டுபவர்கள்:—

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,

நெ. 22, மஹாலக்ஷ்மி தெரு, தியாகராய நகர், சென்னை.

என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

Printed by T. A. P. Srinivasavaradachariar, at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, L. Conjeeveram. Q. H. Ct. 36, (Supply) Edited and Published by S. Vasudevachariar, 22, Mahalakshmi Street, Tyagarayanagar, Madras.